வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 21.10.2021 வியாழக்கிழமை | இதழ் : 320 | பக்கங்கள் : 16

# கூட்டமைப்பை கட்டுக்கோப்பாக சம்பந்தன் வைத்திருக்கவில்லை



## யார் உள்ளே? யார் வெளியே? என்பதுகூட தெரியாதிருந்தது அவர் தலைமையில்தான்

### ‘டான்’ தொலைக்காட்சி பேட்டியில் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் இருக்கும் நிலையில்தான் கூட்டமைப்புக்குள் யார் இருக்கின்றார்கள்? யார் வெளியே இருக்கின்றார்கள்? என்பதுகூட தெரியாதிருந்த நிலையும் இருந்துள்ளது” எனக் குறிப்பிட்டிருக்கும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன், “கூட்டமைப்புக்குள் எல்லாவற்றையும் சம்பந்தன் ஒழுங்காக வைத்திருந்தார். இனிமேல்தான் அனைத்தும் சிதறப்போகிறது என நினைப்பது தவறு” எனவும் உறுதியாகக் கூறியிருக்கின்றார். 15



# இளைஞர்களின் வாழ்க்கையுடன் விளையாடும் கோட்டாபய அரசு

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 21

நாட்டுக்கு பெரும் பலத்தைத் தரும் இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் சூழ்நிலையில் உள்ளதாகவும், இளைஞர்களை கடவுச்சீட்டு வரிசையில் இழுத்து இளைஞர்களின் வாழ்க்கையுடன் அரசாங்கம் விளையாடுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட் 15

# வடக்கில் 639 பாடசாலைகள் இன்று ஆரம்பமாகின்றன!

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு மாகாணத்தில் 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 639 ஆரம்ப பாடசாலைகள் சுகாதார வழிகாட்டலின் கீழ் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன. வடக்கு மாகாண கல்வி, சுகாதாரம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 15

# மீண்டுமொரு கோவிட் அலை அபாயம்!

### சுகாதார நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 21

கொரோனா பரிசோதனைகளைச் செயலிழக்கச் செய்வது மற்றும் எழுமாறான மாதிரிக்கான வழிகளைத் தடுப்பதன் மூலமும், நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் விமானப் பயணிகளின் பி.சி. ஆர். பரிசோதனைகளை முழுமையாக நிறுத்துவதன் மூலமும் மீண்டுமொரு கோவிட் அலை ஏற்படும் அபாயம் இருப்பதாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் 15

# மாகாணம் தாண்ட ஒக். 31 வரை தடை

### இராணுவ தளபதி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 21

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான 15

# முழு நாடும் சிக்கலுக்குள்!

### ரணில் விக்கிரமசிங்க விசனம்



கொழும்பு, ஒக். 21

நாங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தோம். ஆனால், ஏனையவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. பாடசாலை மாணவர்கள் சார்பில் தீர்மானத்தை எடுத்தபோது 15

# மாகாண தேர்தலை நடத்துமாறு அரசை ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தவேண்டும்

### பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபியிடம் வலியுறுத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் ரட்ணஜீவன் 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# ‘எங்கட புத்தகங்கள்’ நூல் கண்காட்சி யாழ். பொதுநூலகத்தில் நாளைமுதல்!

யாழ்ப்பாணம், ஒக். 21

‘எங்கட புத்தகங்கள்’ நூல் கண்காட்சியும் விற்பனையும் நாளை ஆரம்பமாகி சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் விடுத்த செய்திக் குறிப்பில்,

‘எங்கட புத்தகங்கள்’ 2020 ஜனவரி முதல் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்களை காட்சிப்படுத்தி விற்பனைசெய்து வருகிறது. கடந்த ஆண்டு வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சுன்னாகம் பொது நூலகத்தோடு இணைந்து முன்னெடுத்த ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்களின் கண்காட்சி விற்பனை கொரோனா சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு அமைய ஒன்பது தினங்களுக்கு நடைபெற்றிருந்தது.

இந்த ஆண்டு யாழ். பொதுசன நூலகத்தில் எதிர்வரும் 22, 23, மற்றும் 24ஆம் திகதிகளில் இந்தக் புத்தகக் கண்காட்சி விற்பனை இடம்பெற உள்ளது. யாழ். மாநகர சபையின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படும் இந்தக் கண்காட்சி, தற்போது நடைமுறையில் உள்ள சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு நடத்தப்பட உள்ளது.

முந்நூறுக்கும் மேற்பட்ட ஈழத்து எழுத்தாளர்களின் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் அமைந்த புத்தகங்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்படவுள்ளது.

ஈழத்தில் வாழும் எழுத்தாளர்களது புத்தகங்கள் மட்டுமன்றி புலத்தில் வாழும் பல ஈழத்து எழுத்தாளர்களினது புத்தகங்களும் இங்கு காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்படவுள்ளது. அனைத்து புத்தகங்களுக்கும் 10வீத விலைக்கழிவும் தெரிவுசெய்யப்பட்ட புத்தகங்களுக்கு மேலதிக விலைக்கழிவும் வழங்கப்படும்.

தங்களின்புத்தகங்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்யவிரும்பும் ஈழத்து எழுத்தாளர்கள் எம்மோடு தொடர்புகொண்டால், அவர்களின் புத்தகங்களையும் காட்சிப்படுத்தி விற்பனைசெய்ய ஒழுங்கு செய்யமுடியும் - என்றுள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்

**மலர்வு** 16 - 12 - 1937



**உதிர்வு** 17 - 10 - 2021

## டாக்டர் வெற்றிவேலு கதிரவேற்பிள்ளை (V. K. பிள்ளை)

**BSc(Hons), MSc(Lond), PhD(Lond), CSci, FIBMS, C.Chem., MRSC, C.Biol, M.I.Biol**

மலேசியா Seremban ஐப் பிறப்பிடமாகவும், யாழ். புலோலி வடமேற்கு மருதடி பருத்தித்துறை, பிரித்தானியா லண்டன், அவுஸ்திரேலியா Sydney ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு கதிரவேற்பிள்ளை அவர்கள் 17-10-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று சிட்னியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும்,சத்தியபாமா, ருக்குமணி, காலஞ்சென்றவர்களான நடராஜா, சாவித்திரி, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சுபத்திராதேவி, காலஞ்சென்றவர்களான கந்தையா, சங்கரப்பிள்ளை, கந்தசாமி, சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**கிரியை**

Thursday, 21 Oct 2021 12:30 PM - 2:45 PM
Rookwood Memorial Gardens and Crematorium South Chapel
Memorial Ave, Rookwood NSW 2141, Australia

**தகனம்**

Thursday, 21 Oct 2021 2:45 PM
Rookwood Memorial Gardens and Crematorium South Chapel
Memorial Ave, Rookwood NSW 2141, Australia

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

NSW மாநில கட்டுப்பாடுகளுக்கு இணங்க, இரண்டு தடவையும் கோவிட் தடுப்பூசிகள் பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Email: office@libertyfunerals.com.au
Password: PHTKBR
Live time: 21st October from 12.30pm to 3.00pm Sydney time

தொடர்புகளுக்கு:
**ருக்குமணி - சகோதரி**
**Mobile : +14162620682**

தகவல்:
**குடும்பத்தினர்**

# யாழ்ப்பாண வீதிகளில் நகைகளை அபகரித்த நால்வர் கும்பல் சிக்கியது

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தில் வீதியில் சென்றவர்களின் தங்க நகைகளை அபகரித்துச் சென்ற நால்வர் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை, அச்சுவேலி, சுன்னாகம் உள்பட 5 இடங்களில் வீதியில் பயணித்தவர்களிடம் தங்க நகைகளை அறுத்து சென்ற நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள், தெல்லிப்பழை மற்றும் ஏழாலையைச் சேர்ந்த 20 -25 வயதுடையவர்களாவர்.

சந்தேக நபர்களிடமிருந்து நகைகளைக் கொள்வனவு செய்த சுன்னாகத்திலுள்ள நகைக்கடை உரிமையாளர் ஒருவர் 6 பவுண் அளவுடைய 5 சங்கிலிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வழிப்பறிக்குப் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் கடந்த 16ஆம் திகதி வீதியில் சென்ற பெண் ஒருவரிடம் தங்கச் சங்கிலி அறுத்து அபகரிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த வழிப்பறியில் ஈடுபட்டிருந்தனர்.

அன்றைய தினம் இளவாலை மற்றும் சுன்னாகம் பகுதிகளிலும் வீதியில் சென்ற இருவேறு நபர்களிடம் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டன.

இந்த சம்பவங்கள் தொடர்பில் அச்சுவேலி, சுன்னாகம் மற்றும் இளவாலை பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேலும், இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மூன்று வழிப்பறிச் சம்பவங்களுடன் வட்டுக்கோட்டையில் ஒருவரிடமும்மருதனார்மடத்தில் வியாபாரி ஒருவரிடமும் தங்க நகைகள் அபகரித்தமையை சந்தேக நபர்கள் ஒப்புக் கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-3)

# எரிவாயு சிலிண்டருக்கு வர்ணம் மாற்றி மோசடி!

வடமராட்சி, ஒக். 21

மஞ்சள் வர்ண எரிவாயு சிலிண்டருக்கு நீல வர்ணம் பூசி எரிவாயுவை பெற்ற நபர் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நெல்லியடி சந்தையில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு சென்ற நபர் ஒருவர் தனது வெற்று சிலிண்டரை வழங்கிவிட்டு எரிவாயு நிரம்பிய சிலிண்டரை கொள்வனவு செய்தார்.

பின்னரே, மஞ்சள் வர்ண சிலிண்டருக்கு நீல வர்ணம் பூசி வர்த்தகரை ஏமாற்றியமை தெரிய வந்தது. இந்த மோசடி தொடர்பிலேயே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-02)

## கல்வி TV CHANNEL-1

**21.10.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி TV CHANNEL - 2

**21.10.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
21.10.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பின் இழுபறி அரசியல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான, இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரின் எம். ஏ. சுமந்திரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மீனவர் போராட்டம் - அவரின் தனிப்பட்ட செயல்பாடு என்றும் அதனை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கின்றார். கூட்டமைப்புக்குள்ளும் - கூட்டமைப்புக்கு வெளியிலும், அதேவேளை தமிழ் அரசு கட்சிக்குள்ளும் எல்லாவற்றையும் தானே மேற்கொள்ள வேண்டுமென்று சுமந்திரன் எண்ணுகின்றார் - அதுதான் அனைத்துப் பிரச்னைகளுக்கும் காரணமென்றும் அடைக்கலநாதன் குற்றம்சாட்டியிருக்கின்றார். புலம்பெயர் தொலைகாட்சி நேர்காணல் ஒன்றின்போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார்.

இதன் காரணமாகத்தான் எங்களோடு கலந்துரையாடாமல் இப்படியானதோர் அழைப்பை விடுத்திருந்தார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் செல்வம் அடைக்கலநான் குறிப்பிட்டிருக்கின்றார். சுமந்திரன் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும், சுமந்திரனோ அதனை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் செயல்படுகின்றமையும் கூட்டமைப்பின் அன்றாட அரசியலாவிட்டது.

கூட்டமைப்பின் பிரதான கட்சியாக தங்களை அடையாளப்படுத்திவரும் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் உள் பிரச்னைகள் போன்றே மறுபுறத்தில், தென் பகுதியிலும் ஓர் உள்முரண்பாடு கருக்கொண்டு வருகின்றது. அரசாங்கத்தின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன கட்சியினருக்கும், பங்காளிக் கட்சிகளுக்குமிடையில் ஓர் இழுபறி அரசியல் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்றது. அடி மட்டத்தில் கைகலப்புக்கள்கூட இடம்பெறுகின்றன. இந்த நிலையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஒரு புதிய கூட்டணி தொடர்பிலும் அவர்கள் சித்தித்துவருகின்றன எனச் செய்திகள் வெளிவருகின்றன. ஆனால், அங்குள்ள நிலைமைக்கும், இங்குள்ள நிலைமைக்கும் இடையில் ஓர் அடிப்படையான வேறுபாடுண்டு. அதாவது, பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகள் தேவைப்பட்டால், வெளியேறி தேர்தலை எதிர்கொள்ளும் ஆற்றலோடு இருக்கின்றன. ஆனால், கூட்டமைப்பின் நிலைமை அப்படியல்ல.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் எக்காரணம் கொண்டும் தனித்து செல்லும் ஆற்றலோடு இல்லையென்றே சுமந்திரன் கருதுகின்றார். இதன் காரணமாகத்தான் சுமந்திரன் தன்மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அலட்டிக் கொள்ளவில்லை. இந்த விடயத்தை சரியாக விளங்கிக்கொள்ள முடியாமலேயே பங்காளிக் கட்சியினரும் குற்றசாட்டுக்களை முன்வைப்பதுடன் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். பலவீனமான நிலையில்தான் உதாசீனங்கள் ஏற்படுகின்றன. பங்காளிகள் வெளியேறினால், தங்களால் தனித்து நிற்க முடியாது என்னும் அச்சம் தமிழ் அரசு கட்சிக்கு ஏற்பட்டவில்லை. அப்படியான சூழல் இருந்திருக்குமானால் இவ்வாறான உதாசீனங்கள் இடம்பெற்றிருக்கவும் மாட்டாது.

கூட்டமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒன்றும் - தற்போது முரண்பட்டு வெளியேறியிருக்கும் கடசியுமான, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும் இணைத்துக் கொண்டு, கூட்டமைப்பிற்கான உரித்தை பங்காளிகள் தம்வசப்படுத்தினால் என்ன நிகழும்? பங்காளிக் கட்சிகள் இவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுத்தால் தமிழ் அரசு கட்சியின் நிலைமை கேள்விக்குள்ளாகிவிடும். ஆனால், பங்காளிக் கட்சிகள் அந்தளவுக்கு செல்லக்கூடிய வல்லமையுடன் இல்லையென்றே தமிழ் அரசு கட்சியினர் கருதுகின்றனர். இந்த இடத்திலிருந்துதான் உதாசீனங்கள் தொடர்கின்றன.

'ஈழநாடு' தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் விடயம் - கூட்டமைப்பின் உள்முரண்பாடுகள் என்பது வெறுமனே கூட்டமைப்பின் பிரச்னையில்லை. அது மக்களின் பிரச்னை. நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் கூட்டமைப்பின் உருவாக்கம் தொடர்பில் சில விடயங்களை அழுத்திக் குறிப்பிட்டிருந்தோம். கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதென்பது, தமிழ் மக்களின் அரசியல் இருப்பை மேலும் சிதைப்பதாகும். இந்த நிலைமையை கருத்தில் கொண்டுதான் இந்த விடயங்கள் தொடர்பில் 'ஈழநாடு' தொடர்ந்தும் சில விடயங்களை வலியுறுத்தி வருகின்றது. கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் மத்தியில் ஒரு சமநிலையான உறவு இல்லாவிட்டால், கூட்டமைப்பை பலமான நிலையில் பேணிக்கொள்ள முடியாது.

# 'மித்ர சக்தி':
## இலங்கை – இந்திய இராணுவ கூட்டுப்பயிற்சி!

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இந்திய இராணுவம் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் விதத்தில் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இந்திய அமைதிப் படை என்ற பெயரில் களமிறங்கியிருந்தது.*

*அச்சமயத்தில் இந்திய இராணுவத்தில் ஓர் இளம் இராணுவ லெப்டினன்டாக பணியாற்றியவரே இந்திய இராணுவத்தின் இன்றைய பிரதம தளபதியாக இருக்கும் ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவானே.*

*எனவே, 34ஆண்டுகளின் பின்னர் தாம் இந்திய அமைதிப்படையில் பணியாற்றியதை நினைவு கூர்ந்தவராக இந்திய இராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவானே 'மித்ர சக்தி' என்றழைக்கப்பட்ட இந்திய - இராணுவ கூட்டுப் பயிற்சியை பார்வையிடும் வகையிலும் இந்தியாவுக்கும் - இலங்கைக்குமிடையிலான இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பை பலப்படுத்தும் விதத்திலும் இலங்கை வந்திருந்தார்.*

*இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையுடனான இராணுவ ஒத்துழைப்பு என்றுமில்லாத வகையில் மிக அதிகமாகத் தேவைப்படுகின்றது. இந்தியாவின் மேற்கே பாகிஸ்தானுடன் சீனா கொண்டுள்ள உறவு, மற்றும் கிழக்கே லடாக் முதல் அருணாசல பிரதேசம் வரை சீனாவுடனான எல்லைப் பகுதிகளில் காணப்படும் பதற்ற நிலை ஆகியவற்றுக்கிடையே இலங்கையில் சீனா மேற்கொண்டு வரும் பிரமாண்டமான கட்டுமானப்பணிகள் என்பவை இந்தியாவை தென்னாசியப் பிராந்தியத்தில் சினங்கொள்ள வைத்துள்ளது.*

*இதன் வெளிப்பாடாகவே இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா அண்மையில் கொழும்பு வந்திருந்தார். அவரைத் தொடர்ந்து இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவானே கடந்த 4ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற இந்திய - இலங்கை கூட்டு இராணுவ பயிற்சியை பார்வையிட இலங்கை வந்திருந்தார். இந்தியாவுக்கும் - இலங்கைக்குமிடையிலான கூட்டுப்பயிற்சியை நடத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட இடம் இலங்கையைப் பொறுத்தவரை என்று கூறுவதைவிட இந்தியாவைப் பொறுத்தவரை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கின்றது.*

*ஆங்கிலேயர் ஆட்சியில் சீனாவை நோக்கியதாக திருகோணமலையின் துறைமுகமும் அதன் கடல் குடா பகுதியும் அமைந்திருந்தமையால் ஆங்கிலேயர்கள் சீனன் குடா என அக்குடாவுக்கு பெயரிட்டனர்.*

*'மித்ர சக்தி' இராணுவ நடவடிக்கை திருகோணமலைக்கு தென்கிழக்கே 150 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள அம்பாறையில் இராணுவ பயிற்சி நிலையத்தை அண்டிய பிரதேசத்தில் இடம்பெற்றிருந்தது.*

*இப்பிரதேசம் அம்பாறை விமான நிலையம் மற்றும் தென்கிழக்கிலங்கையில் அமைந்துள்ள பொத்துவில் துறைமுகம் என்பவற்றை அண்டியதாக அமைந்துள்ளது. அத்துடன், சீன உதவியுடன் தென்னிலங்கையில் அமைக்கப்பட்டுள்ள மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் என்பவற்றை ஓர் இராணுவ நடவடிக்கையின் போது அம்பாறையிலிருந்து விரைவாக சென்றடையவும் முடியும். இவற்றை கவனத்தில் எடுத்தே இந்திய - இலங்கை இராணுவ கூட்டுப்பயிற்சிக்கான இடமாக அம்பாறை தெரிவு செய்யப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது.*

*இலங்கைக்கு இந்திய அமைதிப்படை 1987ஆம் ஆண்டு வந்தபோது இந்திய இராணுவத் தளபதியாக இருந்தவர் ஜெனரல் கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி என்ற தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த இராணுவ செயல்பாட்டாளரான ஜெனரல் சுந்தர்ஜியே சீக்கிய தீவிரவாதிகளை பொற்கோயிலுக்குள் இருந்து 1984ஆம் ஆண்டு விரட்டியடிப்பதற்கான இராணுவ அணுகுமுறையை செயல்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்திய இராணுவம் அமைதிப்படை என்று தெரிவித்து இலங்கைக்கு வருவதற்கு முன்பதாக இரு முக்கிய இராணுவ ஒத்திகைகள் இந்தியாவின் மேற்கிலும் கிழக்கிலும் ஜெனரல் கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜியின் வழிகாட்டலின்கீழ் நடத்தப்பட்டிருந்தன.*


*இவற்றையடுத்தே இந்திய அமைதிப்படை பலாலி விமான நிலையம் ஊடாகவும், காங்கேசன் துறைமுகம் ஊடாகவும் இந்திய அமைதிப் படையினர் இலங்கையை வந்தடைந்து, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தத்தை அமுலாக்கும் விதத்தில் நிலைகொண்டனர்.*

*இருந்தபோதிலும் இந்திய அமைதிப்படை தனது முயற்சியில் தோல்வியைத் தழுவி வெளியேறியிருந்தது. இராஜதந்திர மற்றும் இராணுவ ரீதியாக பார்க்கும்போது இந்திய அமைதிப்படையின் வெளியேற்றம் ஓர் இராணுவ ரீதியான தோல்விபோல தென்படலாம்.*

*ஆனால், இந்திய இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜியைப் பொறுத்தவரை இலங்கையில் இந்திய அமைதிப்படை நடவடிக்கைகூட இந்திய இராணுவத்துக்கு ஒரு புத்துயிர் அளிக்கும் நடவடிக்கையாகவே கருதப்பட்டிருக்க முடியும்.*

*அவ்வகையில் இந்தியாவின் தற்போதைய 'மித்ர சக்தி' இராணுவ கூட்டுப்பயிற்சிகூட சீனாவின் மீது கண்ணோட்டம் விடுவதாக இலங்கையில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் இராணுவ ஒத்திகை என்றே குறிப்பிட முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒக்ரோபர் - 21 வியாழக்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி - 04
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : பிரதமை




**21.10.2021**

**மேடம்**
உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்களின் செல்வாக்கு உயரும். கருணை காரணமாக உதவி செய்வீர்கள். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**இடபம்**
குழந்தைகள் செய்யும் செயலால் பெருமிதம் அதிகரிக்கும். பெற்றோரும், உடன்பிறப்புகளும் உங்களுடன் பிரியமாக இருப்பர். கணவன் மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும்.

**மிதுனம்**
ஆரோக்கியத்தைக் கெடுக்கும் பழக்கங்களை விலக்குங்கள். பணிபுரியும் இடத்தில் நீங்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சந்தோஷ வாய்ப்புகள் வந்துசேரும். பதவி உயரும்.

**கடகம்**
நண்பர்களின் மூலம் நிம்மதி கிடைக்கும். திருமண பாக்கியம் உண்டு. வெற்றி ஏற்பட்டு பெருமை சேரும்நாள். பாக்கிகள் வசூலாகும். வாய்ப்பு ஒன்று தட்டிப்போகலாம். மனதில் திருப்தி நிலவும்.

**சிம்மம்**
மனு செய்திருந்த கடனுக்கு அனுமதி கிடைத்து மகிழ்வீர்கள். எது செய்தாலும் விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும்.விரோதம் அதிகரிக்காமல் அமைதியுடன் பேசுங்கள்.

**கன்னி**
பிறர் பாராட்டும்படியான செயல் ஒன்றைச் செய்வீர்கள். பல கால பிடிவாதத்தை கொஞ்சம் தளர்த்திக் கொள்ள நேரிடும். உறவினர்கள், நண்பர்கள் இடையே உங்களின் அந்தஸ்து உயரும்.

**துலாம்**
முன்பு செய்த முயற்சிகளுக்கு இப்போது நல்ல பலன் கிடைக்கும். மனதில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த தடுமாற்றம் ஒன்று நீங்கும். நவீன பொருட்கள் வாங்குவீர்கள். சிறந்த உணவு கிடைக்கும்.

**விருட்சிகம்**
வாழ்க்கைத்துணையால் சிறு சிறு செலவுகள் இருக்கும். விருந்துக்குச் செல்வீர்கள். சகோதர, சகோதரிக்கு நன்மை உண்டு. துணிச்சலான செயல் ஒன்றால் நிறைவான பலன் காண்பீர்கள்.

**தனுசு**
நெருங்கிய நண்பர் கைகொடுப்பதால் பணி ஒன்று நிறைவாகும். உங்களின் புகழ் கூடுதலாகும். சொத்து வாங்கும் வாய்ப்பு வரும். கலைஞர்களுக்கு ஏற்றம். உங்களின் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**மகரம்**
தேவையற்ற கோபம் காரணமாக நல்லவர் நட்பை இழக்க வேண்டாம். சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். பணத்தையும், வார்த்தைகளையும் கவனமாகக் கையாளுங்கள்.

**கும்பம்**
முயற்சிகளில் சுமாரான வெற்றியைத்தான் எதிர்பார்க்கலாம். சிறு ஆதாயம் உண்டு. பேச்சிலும், செயலிலும் கவனம். நேர்மையான வழியில் பணம் சம்பாதிப்பது பற்றி உறுதி கொள்ளுங்கள்.

**மீனம்**
புகழ் பெறுவீர்கள். நெருங்கியவர்களால் ஏற்பட்ட கவலை தீரும். எதிர்பாராத நன்மையும் லாபமும் உங்களைத் தேடிவரும். பணியும் அதிகரித்து அதன் மூலம் வருமானமும் கூடும்.

# அ.தி.மு.கவுக்கும் சசிகலாவுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை

## சட்டப்படி நடவடிக்கை என்கிறார் எடப்பாடி

சென்னை, ஒக். 21,

"அ.தி.மு.க.வுக்கும் சசிகலாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர்மீது சட்டடிப்படி நடவடிக்கை எடுப்போம்" என்று அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி மீண்டும் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தமிழக ஆளுநரை சந்தித்துவிட்டு செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சசிகலா தன்னை அ.தி.மு.க. பொதுச் செயலாள ராக அறிவித்துக்கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தி வருவது பற்றி செய்தியாளர்கள் கேட்டனர். அப்போது ஆவேசமாக பதிலளித்த எடப்பாடி பழனிசாமி, "அவர் சொல்லிக்கொண்டு இருக்கிறார். எங்களுக்கு என்ன இருக்குது?" என்று மிகக் கடுமையான முறையில் சசிகலாவை விமர்சித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "ஏற்கனவே நீதிமன்றம் சொல்லிவிட்டது. தேர்தல் ஆணையம் சொல்லிவிட்டது. ஆனால், அவருக்கு பொழுது



போகவில்லை என்று இதையே சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர்மீது ஏற்கனவே காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி நடவடிக்கை எடுப்போம். அ.தி.மு.க.வுக்கும் சசிகலாவுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. இதை பலமுறை சொல்லியாகிவிட்டது. பத்திரிகைகளும் ஊடகங்களும்தான் இதை பெரிதுபடுத்தி விறுவிறுப்பாக செய்தி போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்" என்று தெரிவித்தார் எடப்பாடி பழனிசாமி.

# உள்ளூராட்சி தேர்தலில் முறைகேடு; உடனடியாக நடவடிக்கை எடுங்கள்

## ஆளுநரை சந்தித்து எடப்பாடி முறைப்பாடு



சென்னை, ஒக். 21,

தமிழகத்தில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் முறைகேடுகள் இடம் பெற்றிருக்கின்றன என முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான அ.தி.மு.க.வின் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று தமிழக ஆளுநர் ரவியை சந்தித்து முறைப்பாடு செய்துள்ளார்.

அவரோடு அ.தி.மு.கவின் துணை ஒருங்கிணைப்பாளர்களான கே.பி முனுசாமி, வைத்திலிங்கம், ஜெயகுமார், வேலுமணி, தங்கமணி உள்ளிட்டோர் இருந்தனர். அதன் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த எடப்பாடி பழனிசாமி தெரிவித்ததாவது:-

"நடந்து முடிந்த ஊரக உள்ளாட்சி தேர்தலில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து ஆளுநரிடம் விளக்கமாக தெளிவாக புகார் மனு அளித்து இருக்கிறோம். இந்த தேர்தலில் ஆளும் கட்சியான தி.மு.க. தில்லுமுல்லு செய்து ஜனநாயகப் படுகொலை செய்து வெற்றி பெற்றவர்களை எல்லாம் தோல்வியுற்றவர்களாக அறிவித்திருக்கிறார்கள். தேர்தல் ஆணையம் அரசின் கைப்பாவையாக செயல்பட்டிருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தேர்தல் பணிகளை முறையாக கவனிக்கவில்லை. எங்கள் கட்சியினர் தேர்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவரை சந்திக்க சென்றபோது அவர்களைச் சந்திக்க வாய்ப்பு அளிக்கப்படவில்லை. தி.மு.க.வினர் வெற்றி பெற்றால் உடனுக்குடன் அறிவித்த தேர்தல் அதிகாரிகள் அ.தி.மு.க.வினர் வெற்றிபெற்றால் அதை அறிவிக்க நீண்ட நேரம் எடுத்துக் கொண்டனர்.

பல்வேறு இடங்களில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அதிமுகவினரை தோல்வியுற்றவர்கள் ஆக அறிவித்திருக்கிறார்கள். எந்தெந்த இடங்கள் என்னென்ன புகார்கள் என்பதை எல்லாம் விளக்கமாக பட்டியலிட்டு ஆளுநரிடம் அளித்திருக்கிறோம். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறோம்" என்று தெரிவித்தார் பழனிச்சாமி.

# ஊராட்சி தலைவியான 90 வயது மூதாட்டி

சென்னை, ஒக். 21

தமிழகத்தில் அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்று நெல்லை மாவட்டம் சிவந்திப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவியாக தொண்ணூறு வயது மூதாட்டி பெருமாத்தாள் நேற்று பதவி ஏற்றுக் கொண் டார்.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக் குறிச்சி, திருநெல்வேலி, தென் காசி ஆகிய 9 மாவட்டங்களில் அக்டோபர் 6 மற்றும் 9 ஆகிய தேதிகளில் இருகட்டங்களாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது.

இதில் வெற்றி பெற்ற மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றி யத் தலைவர், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகியோர் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிவந்திப் பட்டி ஊராட்சி மன்ற தலைவருக்கு போட்டியிட்ட தொண்ணூறு வயது மூதாட்டி பெரு மாத்தாள், 1568 வாக்குகள் பெற்று வெற்றி



பெற்றார். பெரும்மாத்தாள் வெற்றியை, கிராம வெற்றியாக கருதி அவ்வூர் மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடினர்.

இந்த நிலையில் நேற்று சிவந்திப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவராக பெருமாத்தாள் பாட்டி பதவியேற்றார். அவ ருக்கு ஊர் மக்கள் உற்சாகத்துடன் சால்வைகள் அணிவித்து மரியாதை செலுத்தினர். அதன்படி, தமிழ்நாட்டின் மிக மூத்த ஊராட்சி தலைவி என்ற பெரு மைக்கு சொந்தகாரர் ஆகினார் மூதாட்டி பெருமாத்தாள்.

# அமைச்சர் மஹிந்தானந்தவை பாதுகாக்க தயாராகிறது அரசு!

## நம்பிக்கையில்லா பிரேரணை வருமானால் 2/3 பெரும்பான்மையுடன் தோற்கடிக்க திட்டம்



கொழும்பு, ஒக். 21

**விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்படும் பட்சத்தில் அதனை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடிப்பதற்கு தயார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.**

உரத் தட்டுப்பாட்டு விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை முன்வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருகின்றது.

இவ்வாரம் நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத் தொடரின்போது இதற்காக எதிரணி உறுப்பினர்களிடம் கையொப்பம் திரட்டப்படலாம். அதன்பிறகு நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்படும்.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பில் அரச தலைமைக் கட்சியான பொதுஜன பெரமுன உறுப்பினர்களிடம் வினவியபோது,

"விவசாயிகளுக்காக அல்ல அரசியல் செய்வதற்காகவே எதிரணி இவ்வாறு செயற்படுகின்றது. நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தால்கூட அதனை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடிப்போம்." - என்றனர்.

# எதிர்க்கட்சி சம்பிரதாயத்தை மாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி

## சஜித் பிரேமதாஸ பெருமிதம்

கொழும்பு, ஒக். 21

ஐக்கிய மக்கள் சக்தி பாரம்பரிய எதிர்க்கட்சியாக இல்லாது ஒரு நவீனத்துவ, மக்கள் சார்பு எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரலாற்றில் எந்த எதிர்க்கட்சியும் நடைமுறையில் நலன்புரி மற்றும் பொதுச் சேவையில் ஈடுபடவில்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தி இந்த சம்பிரதாயத்தை மாற்றியமைத்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியாக இருந்தபோது எதிர்ப்புகள் மற்றும் வேலை நிறுத்தங்கள் தவிர வேறு எந்தப் பொதுச் சேவையாவது செய்ததா எனக் கேட்கிறார் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி இதுபோன்ற சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடமாட்டாது என்றும் அவர் கூறினார்.

நமது நாடு எதிர்நோக்கியுள்ள இந்தப் பேரழிவிலிருந்து காப்பாற்ற பாரம்பரிய தனி மனித அரசியல் மட்டும் வழி அல்ல என்றும், பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்த நாட்டை, சமூகரீதியாக வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்க வழி, நாட்டுக்கான சேவையே என்றும் அவர் குறிப்பிட்டார்.

தூரநோக்கற்ற அரசாங்கம் மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியபோது, "எதிர்க்கட்சியின் மூச்சு" திட்டத்தின் மூலம் ஐக்கிய மக்கள் சக்தி உயிர்களைக் காப்பாற்றியது எனவும் இன்று, விவசாயிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என ஒட்டுமொத்த நாட்டையும் பேரழிவு தரும் நிலைக்கு தள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

# காரைநகரில் காணாமல்போன இந்திய மீனவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 21

காரைநகர் கடற்பரப்பில் காணாமல்போன இந்திய மீனவரின் உயிரற்ற உடல் நேற்று கடற்படையினரால் மீட்கப்பட்டது.

காரைநகர் கடற்பரப்புக்குள் நேற்றுமுன்தினம் ஊடுருவிய இந்திய மீன்பிடிப் படகை கடற்படையினர் கைப்பற்ற முயன்றவேளை, கடற்படையினரினதும் மீனவர்களதும் படகு மோதியதில் இந்திய மீனவர்களின் படகு நொருங்கிக் கடலில் மூழ்கியது. இதன்போது படகில் இருந்த மூவரில் இருவர் மட்டுமே காப்பாற்றப்பட்டனர். இருந்தபோதும் ஒருவர் காணாமல்போயிருந்தார்.

இவ்வாறு காணாமல் போன இந்திய மீனவரின் உடல் நேற்று கடற்படையினரால் மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு கொண்டுவரப்பட்டது.

காங்கேசன்துறை கொண்டுவரப்பட்ட சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

# மனிதர்களை சாப்பிடும் பயங்கர மீன் இனம் இலங்கையிலும் அடையாளம் காணப்பட்டது

கொழும்பு, ஒக். 21

இலங்கையிலுள்ள நீர் நிலைகளில் மனிதர்களை சாப்பிடும் 'பிரான்ஹா' எனப்படும் மிக ஆபத்தான மீன் வகைகள் உள்ளனவென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏதோ ஒரு வகையில் மனிதர்களை சாப்பிடும் இந்த மீன் வகைகள் இலங்கை நீர் நிலைகளில் விடப்பட்டுள்ளன என, மீன் வளர்ப்பு பிரிவின் மூத்த விஞ்ஞானி அஜித் குமார தெரிவித்துள்ளார்.

அதற்கமைய களனி கங்கை, பொல்கொடை மற்றும் தியவன்ன ஏரி போன்ற இடங்களில் இந்த மீன் இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சில காலங்களுக்கு முன்பு அலங்கார மீன் தொழிலுக்கு கொண்டுவரப்பட்ட மீன்களில் பிரான்ஹாக்களும் இருந்திருக்கலாம் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட மீன்கள் ஊடாக இவை இலங்கைக்குள் வந்திருக்கலாம். அல்லது வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது இந்த மீன்கள் வந்திருக்கலாம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போதைய நிலையில் அவ்வாறான மீன்கள் வெளிநாடுகளில் இருந்து கொண்டு முடியாது. எனினும் சில காலங்களுக்கு முன்னர் அவ்வாறு கொண்டு வந்திருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நேற்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்.மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன், மாநகர ஆணையாளர் இ. த. ஜெயசீலன் ஆகியோரால் இது உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் யாழ் மாநகர சபை உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட யாழ்.மாநகரசபையின் இணையத்தளத்தில் யாழ். மாநர சபை தொடர்பான சகல தகவல்களையும் சேவைகளையும் பொது மக்கள் இணையத் தளத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். (அ-03)



# யாழ். மாநகர சபை செயல்பாடுகள் அனைத்தும் விரைவில் கணனி மயம்

## முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்.மாநகர சபையின் செயல்பாடுகள் அனைத்தும் விரைவில் கணனி மயப்படுத்தப்படும் என யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்

நேற்று யாழ்.மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நாம் கணனி உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் யாழ்.மாநகர சபையின் செயல்பாடுகளை முற்றுமுழுதாக இணையவழி மூலம் கணனி மயப்படுத்தவேண்டும் என்பது எனது இலக்கு. அந்த இலக்கை நோக்கிய பயணத்தின் மிக காத்திரமான பணியின் ஒரு பகுதியை இன்று நாங்கள் அடைந்துள்ளோம்.

அத்துடன் எதிர்காலத்தில் யாழ்.மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டு இணையத்தின் ஊடாக பொதுமக்கள் தமது சேவையை வீட்டில் இருந்தே பெற்றுக் கொள்ளக்கூடியவாறு செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதற்குரிய வேலைத் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையத்தளமானது பொது மக்கள் தமக்குரிய சேவையை வீடுகளில் இருந்தவாறே இணையத்தினூடாக பெறக்கூடியவாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே எமது பதவிக் காலம் விரைவில் முடிந்துவிட்டாலும் எதிர்வரும் காலத்தில் இந்த மாநகர சபையை பொறுப்பேற்கும் நிர்வாகமானது முழுமையாக இணையமயமாக்கப்பட்ட மாநகர சபையை பொறுப்பேற்கும் - என்றார். (அ-03)

# சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது

கொழும்பு, ஒக். 21

ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையில் 7 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

7,096 சுற்றுலாப் பயணிகள் குறித்த காலப்பகுதிக்குள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, கஸகஸ்தான், ஜேர்மன், உக்ரைன், சீனா, கனடா, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இருந்து இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# யாழ். மாநகர சபையால் உருவாக்கப்படும் சேதன பசளைக்கான கேள்வி அதிகரிப்பு

## ஆணையாளர் ஜெயசீலன் தகவல்



யாழ்ப்பாணம், ஒக். 21

**யாழ். மாநகர சபை மீள் சுழற்சி மையத்தில் உரு வாக்கப்படும் சேதனப் பசளைக்கான கேள்வி அதி கரித்துள்ளதாக யாழ். மாநகர சபையின் ஆணையாளர் ரி.ஜெயசீலன் தெரிவித்தார்.**

யாழ். மாநகர சபை சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சேதனப் பசளை உற்பத்தி என்பது யாழ். மாநகர சபையின் மீள் சுழற்சி தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. மிகவும் அண்மைக் காலமாக சேதன பசளைக்கு கேள்வி அதிகமாகக் காணப்படு வதன் காரணமாக சேதனப் பசளை உற்பத்தியை நாம் அதிகரித்துள்ளோம்.

அண்மைய காலங்களில் மாதத்துக்கு 25ஆயிரம் தொடக் கம் 30 ஆயிரம் கிலோ சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. 'வீரியம்' என்ற பெயரில் யாழ். மாநகர சபைக்கு சொந்தமான மீள் சுழற்சி மையத்தில் சேதன பசளை உற்பத்தி செய்யப்பட்டு ஒரு கிலோ 20 ரூபாய் விலை யில் விற்கப்படுகிறது.

இந்த சேதனப்பசளையை விவசாயிகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் ஆர்வத்துடன் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் மாநகரசபை மீள் சுழற்சி மையத்தில் உருவாக் கப்படும் சேதனப் பசளையை மீள் சுழற்சி மையத்திலும் மற் றும் ஏனைய திரட்டு அலுவலங் களிலும் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (அ-3)

# எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக இலங்கை - ஓமான் இடையே கடன் ஒப்பந்தம்

கொழும்பு, ஒக். 21


நாட்டுக்கு தேவையான எரி பொருளைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை - ஓமான் இடையே கடன் ஒப்பந்த மொன்று கையெழுத்தாகவுள் ளது.

360 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப் பந்தமொன்றே இவ்வாறு கையெழுத்தாகவுள்ளதாக எரி சக்தி அமைச்சர் உதய கம்மன் பில தெரிவித்தார்.

இவ்வாறு பெற்றுக்கொள் ளப்படும் கடனை திருப்பிச் செலுத்துவதற்காக 5 வருட சலு கைக் காலத்துடன் 20 வருடங் களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட் டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் மேலும் கூறினார்.

தற்போதைய நிலைமையில் டீசல் ஒரு லீற்றரில் 35 ரூபாயும், ஒரு லீற்றர் பெற்றோலுக்காக 18 ரூபாய் நட்டத்தையும் எதிர் கொண்டு வருவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் எரிபொருள் தேவைக்காக மாதமொன்றுக்கு 35 கோடி டொலர் செல விடப்படுவதாகவும், தற்போது கொள்வனவு செய்யவுள்ள எரி பொருளானது ஒரு வருடத் துக்கு போதுமானதாக இருக்கு மெனவும் அவர் கூறினார்.



# பகவத்கீதையை மோடியிடம் வழங்கினார் நாமல் ராஜபக்ஷ

புதுடில்லி, ஒக். 21

இந்தியாவின், குஷிநகர் சர்வ தேச விமான நிலைய திறப்பு விழாவுக்காக இந்தியா சென் றுள்ள அமைச்சர் நாமல் ராஜ பக்ஷ நேற்று பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரை யாடினார்.

இதன்போது, பகவத் கீதை யின் தமிழ், ஆங்கிலம், சிங்களம் மொழிப்பெயர்ப்பு களின் முதல் பிரதியை இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கினார்.

குஷிநகர் சர்வதேச விமான நிலைய ஆரம்பவிழாவில் கொழும்பில் இருந்து 100 இற் கும் மேற்பட்ட பௌத்த துறவி கள் மற்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான பிரமுகர்களுடன் புத்தரின் புனித நினைவுச் சின்னங்களைக் கொண்டு சென்ற விமானம் முதலில் தரையிறங்கியது.

இந்த நிகழ்வின் விசேட அம்சமாக, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே 2500 வருடங்களாகக் காணப் படும் நட்புறவின் அடையாள மாக, பாரத தேசம் இந்த உலகுக்குத் தந்த மிகப் புனித மான நூலான பகவத் கீதையின் மும்மொழிப் பிரதியை விளை யாட்டுத்துறை மற்றும் இளை ஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் அறிவுறுத்தலுக்கு அமை வாக, புத்தசாசன சமய, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச் சின் கீழ் இயங்கும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் பகவத் கீதை என் னும் நூல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் பதிப்பிக்கப்பட்டது. (அ)

# போலி வாகன இலக்கத்தகடு தயாரித்த இருவர் சிக்கினர்!

கொழும்பு, ஒக். 21

மோட்டார் போக்குவரத்து அதிகார சபையினால் வெளியி டப்படும் வாகன இலக்கத்தகடு களை ஒத்த போலி இலக்கத் தகடுகளை தயாரித்து வந்த சந் தேகநபர்கள் இருவர் புதுக்குடி யிருப்பு பிரதேசத்தில் பொலி ஸாரினால் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் சம்பந்தப்பட்ட இலக்கத்தகடு களை நவீன ரக கார்களுக்கு பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக விசேட அதிரடிப்படையின் முல்லைத் தீவு முகாமுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்த சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்பட்ட தாக விசேட அதிரடிப்படையி னர் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத் தைச் சேர்ந்த 36 மற்றும் 39 வயதுடைய இருவரே இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

இவர்களிடமிருந்து கப் ரக வாகனமொன்று, லப்ரொப், நிற அச்சு இயந்திரம், பென்ட்ரைவ் 2, போலி இலக்க அச்சுகள் 2, சீல், அரச இலச்சினை பொருத் தப்பட்ட ஸ்ரிக்கர் 153 மற்றும் எம்.ஓ.டி. என்ற பெயர் குறிப் பிடப்பட்ட ஸ்டிக்கர் ஒன்று என்பன கைபற்றப்பட்டுள்ளன.

இதன்போது கைப்பற்றப் பட்ட பொருள்களுடன் சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக் காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

# 7 வயது சிறுவன் குளத்தில் வீழ்ந்து உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 21

மெதகமை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கெந்தவின்னவில் குள மொன்றில் விழுந்து சிறு வன் ஒருவன் உயிரிழந்த துயரச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கெந்தவின்ன, மஹகங்கொட, இத்தேகலவைச் சேர்ந்த சுனேத் ஹேஷான் என்ற ஏழு வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந் தாரென பொலிஸார் தெரிவித் தனர்.

இவ்வாறு உயிரிழந்த சிறு வன் தனது 4 மற்றும் 11 வயது டைய சகோதரர்களுடன், நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் பெல்லன் ஓயா வுக்கு நீராடச் சென்றுள்ளான்.

இதன்போது அதற்கு அரு கில் அமைக்கப்பட்டிருந்த மீன் வளர்ப்புக்கான குளத்தைப் பார்த் துக்கொண்டிருந்தபோது, அவர் களது தாய் பிள்ளைகளைக் கண்டு சத்தம்போட்டவாறு வந்துள்ளார்.

இதன்போது தாய்க்கு பயந்து பிள்ளைகள் மூவரும் குளத்துக்குள் பாய்ந்துள்ளனர். இதன்போது 7 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான். ஏனைய சிறுவர்கள் இருவரும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.







# குஷி சர்வதேச விமான நிலையத்தில் முதலில் இறங்கிய இலங்கை விமானம்

புதுடில்லி, ஒக். 21

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலம் குஷிநகரில் அமைக் கப்பட்ட சர்வதேச விமான நிலையத்தின் திறப்பு விழாவில் நேற்று முதல் விமானமாக இலங்கை விமானம் தரை யிறங்கியது.

இலங்கையில் இருந்து அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அரச பிரதிநிதிகள் குழுவினரும் 100 பௌத்த பிக்குகளும் இந்த விமானத்தில் பயணித்தனர்.

பௌத்தர்களின் புனித நகரில் திறக்கப்பட்ட சர்வதேச விமான தளத்தில், இலங்கை விமானம் முதலாவதாக தரை யிறங்கியமை வரலாற்று சிறப்பு மிக்க சந்தர்ப்பமாகும்.

மஹாசங்கத்தினரின் ஆசீர்வா தத்துடன் வஸ்கடுவ கபிலவஸ்து புனித சின்னங்கள் சகிதம் வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம் ஆரம்பமாகியதாக இந்திய தூதரகம் தெரிவித்தது.

குஷிநகர் விமான நிலையம் ரூபாய் 260 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. புத்த பிரான் மகாபரிநிர்வாண நிலையை அடைந்த இடத்தைப் பார்வையிட வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச யாத்திரிகர் களுக்கு வசதியாக இது அமைவ துடன், உலகெங்கும் உள்ள புத் தரின் யாத்திரைத் தலங்களை இணைக்கும் வகையிலும் செயல்படும் என்று கூறப்பட் டது.

# எரிபொருள் தட்டுப்பாடு வரலாம்!

கொழும்பு, ஒக். 21

கனிய எண்ணெய் கூட்டுத் தாபனத்தில் டொலர் இன்மை யால் எரிபொருள் கொள்வனவு செய்வது தொடர்பில் தொடர்ந்தும் சிக்கல் நிலவுவ தாகக் கனிய எண்ணெய் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கனிய எண்ணெய் பொது சேவையாளர் சங்கத்தின் தலை வர் அஷோக ரன்வல இதனைத் தெரிவித்தார்.

கனிய எண்ணெய் கூட்டுத் தாபனமானது கையிருப்பில் உள்ள நிதியைக் கொண்டு நாளாந்தம் எரிபொருளைக் கொள்வனவு செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக எரி பொருளுக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும். எனவே, சர்வ தேச நாடுகளுடன் ஒன்றி ணைந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கான உரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவேண்டும் என கனிய எண்ணெய் பொதுச் சேவையாளர் சங்கத்தின் தலை வர் அஷோக ரன்வல கூறினார்.

# இன்றும் நாளையும் பணிப்புறக்கணிப்பு

## ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 21

இன்று வியாழக்கிழமை மற்றும் நாளை வெள்ளிக் கிழமை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணிக்குச் செல்லாமல் சேவைப் புறக்கணிப்பை முன்னெடுக்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன்தீலீசன் தெரிவித்தார்.

நேற்று மதியம் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அரசியல்வாதிகளுடனும் அரசோடு சேர்ந்து இயங்குகின்ற ஒரு சில அமைப்புகளும் சங்கங்களும் 21 ஆம் திகதி பாடசாலைக்குச் செல்வதென அறிவித்திருந்தாலும் அதிபர்களும் ஆசிரியர்களும் எங்கள் உரிமைக்காக சேவையைப் புறக்கணித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையிலே இன்றும் நாளையும் அதிபர்கள், ஆசிரியர்கள் விடுமுறையை அறிவிக்காமல் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி எந்தவித அச்சமுமின்றி இந்தப் போராட்டத்தில் பங்கேற்கவேண்டும்.

கடமைக்கு சமுகமளிக்காவிடின் சம்பளத்தை நிறுத்துவோமென கூறினாலும் அவற்றைச் சட்ட ரீதியாக செயற்படுத்த முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

சேவைப் புறக்கணிப்பு நடைபெறும்போது அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக எந்த சிவில் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர முடியாது என்ற சட்ட ஏற்பாடு காணப்படுகிறது.

அரசு, ஆசிரியர் அதிபர்களோடு தொடர்புபடாத யாரை வைத்து பாடசாலைகளை ஆரம்பித்தாலும் பாட சாலைக்குச் செல்லாத இடத்தில் எந்த விதமான பாதிப்புக்களும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு ஏற்படப் போவதில்லை என்பதை நாங்கள் பொறுப்புடன் கூறிக் கொள்கிறோம்.

இந்த இடத்திலேயே 21ஆம், 22ஆம் திகதிகளில் சேவைப் புறக்கணிப்பை மேற்கொண்டு 25ஆம் திகதி நாங்கள் பாடசாலைக்கு செல்ல தயாராகவுள்ளோம்.

அரசு பல்வேறு விதமான கபட நாடகங்களை மேற்கொண்டு ஆசிரியர்கள், அதிபர்களுக்கு எதிராக சமூகத்தை திருப்பும் வகையிலே ஏற்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த அரசு, பெற்றோர் மாணவர்கள் உடன் அதிபர்கள், ஆசிரியர்களை மோதவிட்டு பிரச்னையை திசை திருப்பலாம் என்று சிந்திக்கும் நிலையில் தொழிற்சங்க ரீதியாக நாங்கள் முடிவு எடுத்து அரசு அறிவித்த திகதிகளில் பாடசாலைக்குச் செல்லாமல் மாணவர்களின் கல்வியை வழங்கும் நோக்கில் எங்கள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் 25 ஆம் திகதி பணிக்குச் செல்வோம்.

21ஆம்,22ஆம் திகதிகளில் மாணவர்களை பாடசாலைக்கு செல்வது எந்த விதத்திலும் பாதுகாப்பானதாக இருக்காது. 25ஆம் திகதி நாங்களாக பாடசாலைக்கு வரும்போது உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள். நாங்கள் பிள்ளைகளுக்கு கற்பித்தல் செயல்பாடுகளை செய்ய தயாராக இருக்கின்றோம் - என்றார். (அ)

# ஆசிரியர் கொடுப்பனவுகளை அதிகரிக்க ஜனாதிபதி - பிரதமர் இணைந்து தீர்மானம்

## கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அறிக்கை



**கொழும்பு, ஒக். 21**

**ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் ஒன்றிணைந்து நம்பிக்கைக்குரிய தீர்வை முன்வைத்துள்ளனர் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நாளை பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் விளக்கமளித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மாணவர்களின் எதிர்காலம் பெற்றோரின் மகிழ்ச்சி மாத்திரமல்ல, நாட்டு மக்கள் அனைவரும் சந்தோசத்திலுள்ளனர். அந்த மகிழ்ச்சியுடன் இலட்சக் கணக்கான மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் இன்றிலிருந்து மீண்டும் ஆரம்பமாகின்றன.

நீண்ட நாள்களாக சந்திக்காமலிருந்த தமது பிள்ளைகளின் மகிழ்ச்சியான முகத்தை பார்ப்பதற்காக இன்று அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வருகை தருவார்கள்.

கல்வி என்பது தேசத்தில் எதிர்காலம். நாட்டின் முன்னேற்றத்தின் பலமும் கல்வியாகும். அந்த கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் ஒன்றிணைந்து நம்பிக்கைக்குரிய தீர்வை முன்வைத்துள்ளனர்.

அதேபோன்று பருத்தித் துறையிலிருந்து தேவேந்திர வரை, மேற்கிலிருந்து கிழக்கு வரை இருக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருவதை எவராலும் தடுக்க முடியாது.

மாணவர்களுக்கான சுதந்திரக் கல்விக்காக இருக்கும் உரிமையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து சுதந்திரக் கல்விக்கான உரிமையைப் பாதுகாத்துக்கொள்வதற்காக சகலரும் கைகோர்த்துக் கொள்ள வேண்டும் - என்றுள்ளது.

# வவுனியா மாவட்டத்தில் முதல் கட்டமாக 85 பாடசாலைகள் இன்று மீண்டும் திறப்பு

வவுனியா, ஒக். 21

வவுனியா மாவட்டத்தில் முதல் கட்டமாக 85 பாடசாலைகள் இன்று முதல் மீளத் திறக்கப்படவுள்ளதாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்தார்.

பாடசாலைகளை மீளத் திறத்தல் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோவிட் அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை கட்டம் கட்டமாக மீளத் திறப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதனடிப்படையில் 200 குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் முதல் கட்டமாக திறக்கப்படவுள்ளன.

அதனடிப்படையில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு வலயங்களுக்கு உட்பட்ட 85 பாடசாலைகள் முதல் கட்டமாக திறக்கப்படவுள்ளன. உரிய சுகாதார முன்னேற்பாடுகளுடன் அவை திறக்கப்படவுள்ளன. குறித்த பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு அப்பகுதி கிராம அலுவலர், சுகாதாரப் பிரிவினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்-என்றார்

# இன்று பாடசாலைக்கு செல்வது குறித்து ஆசிரியர் சங்கங்கள் இடையே குழப்பம்

கொழும்பு, ஒக். 21

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் இன்று(200 மாணவர்களுக்கு குறைவான) ஆரம்பமாகவுள்ள நிலையில் பெரும்பாலான ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கவுள்ளனர் என ஆசிரியர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடு ஸ்தம்பித்துள்ளது. தற்போது ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ள நிலையில் குறிப்பிட்ட சில ஆசிரியர் சங்கங்கள் அரசியல்வாதிகளின் பிண்ணனியில் மறைந்து கொண்டு ஆசிரியர் போராட்டத்தை முன்னெடுத்துவருவதாக பல ஆசிரியர் தொழிற்சங்கங்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இன்று பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு இலங்கை அரச ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா பொதுஜன கல்விச்சேவை சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் உட்பட பிரதேச, மாவட்ட ரீதியில் இயங்கும் பல ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. அதற்கமைய பெரும்பாலான ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுப் போராட்டம் நியாயமானது என்றும் இந்நிலையில் இப்போராட்டத்தை அரசுக்கு எதிரான போராட்டங்களாக்கி அதனை அரசியல்மயமாக்கும் ஆதாயத்தில் சில தொழில்சங்கங்கள் திரைமறைவில் ஈடுபட்டு வருகின்றன என சில ஆசிரியர் சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

# கறுவா, மிளகு, கராம்பு விலைகளும் உயர்ந்தன

கொழும்பு, ஒக். 21

இலங்கையின் சிறு ஏற்று மதிப் பயிர்களான கறுவா, மிளகு, சாதிக்காய், கராம்பு மற்றும் கோப்பி உள்ளிட்ட பிரதான ஏற்றுமதி பயிர்களின் விலைகள் உள்நாட்டுச் சந்தையில் அதிகரித்துள்ளன.

அதேநேரம் நாட்டில் டொலருக்கான பற்றாக்குறை நிலவிய போதிலும் கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த பொருள்களின் ஏற்று மதிகள் ஊடாக 35கோடி அமெரிக்க டொலர் இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டுச் சந்தையில் 500 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வந்த மிளகு கிலோவொன்றின் விலையானது தற்போது 900 ரூபாயாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இதுதவிர, கறுவா ஒரு கிலோகிராம் 3,400 ரூபாயாகவும், கராம்பு ஒரு கிலோகிராம் 1,400 ரூபாயாகவும் அதிகரித் துள்ளன.

அத்துடன், ஒரு கிலோ கிராம் கோப்பி 1,250 ரூபாயாக அதிகரித்துள்ளதோடு, ஒரு கிலோ பாக்கு 1,000 ரூபாயாக அதிகரித்துள்ளதாக ஏற்று மதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மண் கொள்ளை

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஒக். 21

வடமராட்சி கிழக்கில் பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் கொள்ளை இடம்பெற்று வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் குற்றச்சாட்டியுள்ளார்.

நேற்று பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீண்ட நாள்களாக சட்டவிரோதமான மணல் கொள்ளை இந்த பகுதிகளில் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக நான் ஒரு முறை எனது வாகனத்தில் வரும்போது கடத்தல்காரர்கள் என்னை கண்டதும் தமது வாகனத்தை திருப்பிக்கொண்டு சென்றதை நான் நேரடியாகக் கண்டேன்.

அதேபோல் இப்பகுதி மக்கள் மிகவும் அச்சம் அடைந்துள்ளார்கள். அதாவது சட்டவிரோத மணல் அகழ்வு தனியார் காணிகளில் இடம்பெற்று வருகின்றது.

சட்டவிரோதமாக மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாரிடம் தகவல் வழங்கும்போது அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவ்வாறு முறையிடும்போது மணல் கடத்தல்காரர்களிடமிருந்து பொலிஸாரிடம் முறையிட்டவர்களுக்கு தொலைபேசி அழைப்பு வருகின்றது. எனவே பொலிஸாருடன் இணைந்து இந்த சட்டவிரோத மணல் கொள்ளை ஈடுபடுவது என்பது நிரூபணமாகின்றது.

எனவே, குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்.

ஈழநாடு





# மீண்டும் ஆரம்பமாகும் பாடசாலைகள்

வி.ரி.சகாதேவராஜா

**கடந்த இரு வருடங்களில் பாடசாலையை காணாது - வகுப்பறைக் கல்வியை தொடர்ச்சியாக முறைப்படி கற்காத பல இலட்ச மாணவர்கள் அடுத்த வருடம் இரண்டு வகுப்புகளைத் தாண்டி அடுத்த படிநிலைக்குச் செல்லவிருக்கிறார்கள். கடந்த இரு வருடங்களில் கற்கவேண்டிய பாடங்கள் அரைகுறையாக கற்பிக்கப்பட்ட நிலையில் இவர்கள் புதிய படிநிலையில் கால்வைக்கிறார்கள்.....**

நாட்டில் கோவிட் தொற்றினால் ஒன்றரைவருட காலம் மூடப்பட்டிருந்த பாடசாலைகளில் சுமார் 50வீதமான பாடசாலைகள் இன்று வியாழக்கிழமை மீண்டும் திறக்கப்படுகின்றன. இதற்கென கல்வியமைச்சும் சுகாதாரஅமைச்சும் இணைந்து பாரிய வேலைத்திட்ட மொன்றை முன்னெடுத்துவருகிறது.

“பன்டமிக்” (Pandemic) எனப்படும் சர்வதேச தொற்று வியாதியான கொரோனா வைரஸ் அன்று உலகை மிகமோசமாக உலுக்கியது. அதற்கு எமதுநாடும் விதிவிலக்கல்ல. அது கல்வி சமுக, பொருளாதார சகல துறைகளையும் வெகுவாகப் பாதித்திருந்தது. மனிதர்கள் இயல்பாகவே வறுமைக்கு ஈர்க்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

இன்று ஓரளவு தணிந்துவருவதை அவதானிக்கமுடிகிறது. இக்கொடிய கொரோனாவால் உலகில் 212 நாடுகளில் சுமார் 160 கோடி மாணவர்கள் அன்று பாடசாலைக்குச் செல்லமுடியவில்லை. அவர்களது கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது

அதுபோல இலங்கையில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் தொகை 45 இலட்சம். உயர்கல்வி பயிலும் மாண வர்கள் (தேசிய பல்கலைக்கழகங்களில்) 90000 பேர். இவர்களைவிட தனியார் உயர்கல்வி பயிலும் மாணவர் தொகையும் இவ்வாறே பல ஆயிரக்கணக்கில் உள்ளது. உலக மாணவர்கள் தொகையில் 91 சதவீத மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக “யுனெஸ்கோ” அறிவித்துள்ளது. சூம் கல்விதான் எமது கல்விமுறை என்று சொல்லுமளவிற்கு நிலைமை மோசமாகச் சென்றிருந்தது.

கொரோனா முடிந்த பிற்பாடு உலகில் சுமார் 97லட்சம் மாணவர்கள் பூரணமாகவே பாடசாலைக்கு முழுக்குப் போட்டுவிடுவார்கள் என்று உலகளா விய “சேவ் த சில்ட்ரன்” (Save the children) அமைப்பு ஆய்வின்மூலம் வெளிப்படுத்தியிருக்கிறது.

இடைவிலகல் (Dropout) என்பது சர்வசாதாரணமாக இருக்கப்போகின்றது. அதனால் அரசாங்கங்கள் பல மாற்று உபாயங்களை கையாளவேண்டிய கட்டாயம் நிலவும்.கல்விக்காக அரசாங்கம் செலவுசெய்யும் பணம் குறையும். பாதுகாப்புக்கு கல்விக்கு அரசாங்கம் இதுவரை ஒதுக்கிவந்த பணத்தொகை குறைந்து, சுகாதாரத்துறைக்கு அதிகம் ஒதுக்கவேண்டிவந்துள்ளது.

உலகளாவிய கல்வி முறையில் சொல்லப்பட்ட கட்டாயக் கல்வி (Compulsory Education) போய், கோடிக்கணக்கான பிள்ளைகள் கட்டாயமாக வீட்டிலிருக்க வேண்டிய நிலைமை தோன்றியது. வறியவர், செல்வந்தர், நகரம்,கிராமம் என்ற வேறுபாடின்றி சகலரும் பாதிப்புக்குள்ளாகி உள்ள நிலையில் இன்று இணைய வழிக் கல்வி முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதில் நிகழ்நிலைகல்வி முக்கியத்துவம் பெறுகிறது.

உலகப் பொருளாதாரத் தளம் எனும் அமைப்பு கொரோனாவின் தாக்கம் பற்றி மூன்று கருத்துக்களைக் கூறுகின்றது.

1) கொரோனா நோயானது உலகெங்கும் வாழும் பிள்ளைகள் கல்விபெறும் முறையை மாற்றியமைத்துள்ளது.

2) கல்வி தொடர்பான புதிய தீர்வுகள், தேவையான புத்தாக்கங்களைக் கொண்டு வரும்.

3) உலகில் நிலவும் “எண்ம இடைவெளி” யானது (கணினி அறிவில் மக்களிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வு) கல்வி தொடர்பான புதிய அணுகு முறைகள் கல்வித் துறையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை மேலும் விரிவடையச் செய்யும் என்பதாகும்.

செல்வந்த நாடுகளுக்கு அப்பால் இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளிலும் இணையவழிக் கல்வி தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கல்வியின் பயன்கள், இணையவழி வசதியற்றவர்களைச் சென்றடைவதில்லை.

இதன் காரணமாக வசதிகளைப் பெற்றுள்ளவர்களே பயனடைவர். பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும் நிதி வசதியற்றவர்களும் கல்வியில் பின்னடைவைக்காணும் நிலை ஏற்பட்டுள்ளது. இம்மாணவர்கள் நூல் நிலையங்களையும் ஏனைய கற்றல் சாதனங்களையும் கொண்ட கல்வி நிறுவனங்களிலிருந்து அகன்று தொலைதூரம் சென்றுவிட்டனர் என பேராசிரியர் சோ. சந்திரசேகரம் குறிப்பிடுகின்றார்.

எனினும் இணைய வழிக்கல்வி போதுமான பலனை அளிக்கவில்லை. மாணவர்களின் கல்வியில் போதுமான தாக்கத்தைச் செலுத்தவில்லை. வகுப்பறைக் கல்விக்கு பின்பேதான் எதுவும் என பல பெற்றோர்கள் கருத்துரைத்திருந்தனர்.

கடந்த இரு வருடங்களில் பாடசாலையைக் காணாது அல்லது வகுப்பறைக் கல்வியை தொடர்ச்சியாக முறைப்படி கற்காத பல இலட்ச மாணவர்கள் அடுத்த வருடம் இரண்டு வகுப்புகளைத் தாண்டி அடுத்தபடிநிலைக்குச் செல்லவிருக்கிறார்கள். கடந்த இரு வருடங்களில் கற்கவேண்டிய பாடங்கள் அரை குறையாக கற்பிக்கப்பட்டநிலையில் இவர்கள் புதிய படிநிலையில் கால் வைக்கிறார்கள். இன்னும் பலர் முன்பள் ளிக்கல்வியை கற்காமலே முதலாம் வகுப்பில் காலடி எடுத்துவைக்கிறார்கள்.

இம்முறை க.பொ.த சா/த மற்றும் உயர்தரம் எழுதும் மாணவர்கள் பாடசாலையில் முறைப்படி கற்காமல் சூம் இணையம் போன்ற தொழில்நுட்பங்களில் படித்தவர்கள். இவர்கள் அவர்களது வசந்தகாலமான பாடசாலைக் காலத்தை இழந்திருக்கிறார்கள். இவர்களது பரீட்சை பெறுபேறுகள் பாடசாலையின் இருப்பைத் தீர்மானிக்கலாம்.

ஏனெனில் கடந்த மாதம் வெளியான 2020 பொ.த.சா/தர பெறுபேறுகள் பரவலாக சிறப்பாக இருந்தன. இவர்கள் பாடசாலைப் பக்கமே செல்லாமல் சூம் மூலம் கற்று பரீட்சைக்குத் தோற்றியவர்களாவர்.

இலங்கையில் கொரோனா தாக்கம் காரணமாக கடந்த வருடம் 2020 மார்ச் மாதம் 13ஆம் திகதி பத்தாயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகள் இழுத்துமூடப்பட்டன. மார்ச் 13இல் மூடப்பட்ட பாடசாலைகள் சுமார் மூன்றரை மாத விடுமுறைக்குப் பின்னர் ஜூன்மாதம் 27ஆம் திகதி திறக்கப்பட்டு மாணவர்களை 6ஆம் திகதி பகுதியாக உள்ளீர்த்தது. அப்படி ஆரம்பித்து பாடசாலைகள் ஒரு வாரத்துக்குள் ஜூலை 13ஆம் திகதி திங்களன்று மீண்டும் மூடப்பட்டன.



பின்பு அதேமாதம் 17ஆம் திகதி திறக்கப்பட்டு பகுதியளவில் நடைபெற்று வந்தன. இறுதியாக நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளும் நீண்ட கொரோனா விடுமுறையின் பின்னர் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஒரே தடவையில் மீண்டும் திறக்கப்பட்டன. எனினும் பாடசாலைகளின் மாணவர்கள் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வகுப்பு ரீதியாக வாரநாட்களில் பாடசாலை மட்டுப்படுத்தப்பட்டளவில் ஆரம்பமானது.

இவ்வாறாக அடிக்கடி மூடப்பட்டு திறக்கப்பட்டு கடந்த இரு வருட காலப் பகுதியில் ஒன்றரை வருடங்கள் பாடசாலைக்கல்வி பாதிக்கப்பட்டது.அதனால் கல்வி இழக்கப்பட்டிருக்கின்றது. அந்த இழந்தகல்வியை மீட்க இன்று கல்வியமைச்சும் அரசாங்கமும் பலமுயற்சிகளை முன்னெடுத்து போராடிவருகின்றது. அவர்களுடன் இணைந்து கல்விச் சமுகம் ஒத்துழைக்க வேண்டுமென்பதே இன்றைய தேவையாகும்.

ஏலவே கொரோனா 1ஆம் 2ஆம் அலைகளின் பின்னர் பாடசாலைகளை சுகாதார முறைப்படி திறந்த அனுபவம் அனைவருக்குமிருக்கிறது. எனவே இந்த தடவை இலகுவாகவிருக்கும்.

கொரோனா என்றால் முழுநாட்டையும் மூடுவது பரீட்சைகளை நிறுத்துவது கற்றலை போக்குவரத்தை முற்றாக நிறுத்துவது என்பதைவிட அதற்கு மாற்று உபாயங்களைக் கையாண்டு வாழமுற்படவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. அதற்காக புத்திஜீவிகள் கல்வியியலாளர்கள் சிந்திக்கவேண்டிய காலகட்டம் வந்துள்ளது.

இந்நிலையில் இன்று பாடசாலைகள் ஆரம்பமாவதை பலதரப்பினரும் ஆவலோடு வரவேற்கின்றார்கள். இதேவேளை ஆசிரியர்கள் அதிபர்களின் தொழிற்சங்கப்போராட்டம் 99 நாட்களின்பின் நிறைவுக்கு வந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. இதுவும் ஒருவகையில் மகிழ்ச்சிதான். உலகில் ஆசிரியர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் வழங்குகின்ற நாடாக இலங்கை இருப்பதைக்குறிப்பிடலாம்.

நாட்டிலுள்ள பாடசாலைகளில் 200 மாணவர்களைவிட குறைவான எண்ணிக்கையுடைய ஆரம்பநெறி மாணவர்களுள்ள 5,000 பாடசாலைகள் இன்று ஆரம்பமாகின்றன. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டன. கோவிட்தடுப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட பதாதைகள் துண்டுப்பிரசுரங்கள் செய்திக்குறிப்புகள் அனைத்து மாகாணத்திலுள்ள சகல வலயங்களுக்கும் கையளிக்கப்பட்டுளன.

முதலிரு வாரங்களில் மாணவர்களுக்கு சுதந்திரமாக இயல்புநிலைக்கு திரும்புவதற்கேற்றவிதமாக எவ்வித அழுத்தங்களுமின்றி கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன. கற்பித்தல் என்று பெரிதாக எதுவும் இடம்பெறாத வகையில் ஏனைய புறக்கிருத்திய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மாணவர் அனுமதிக்கப்படுவர்.

அதேவேளை ஆரம்பநெறி ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சியளிப்பதற்கான வளவார்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் இந்த வாரத்தில் ஆரம்பநெறி ஆசிரியர்களுக்கு மாணவர்களை கோவிட் நெருக்கடியிலிருந்து கற்றல் நிலைமைக்கு திருப்புவதற்கான பயிற்சியளிப்பார்கள்.

மேலும், மாணவர்களின் உடல் வெப்பநிலையினை அறிவதற்கு உடல் வெப்பமானியும் இதன்போது பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டதுடன் ஆரம்பிக்கப்படும் பாடசாலை தொடர்ந்து மூடாமல் இருப்பதற்கு ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் பெற்றோர்களின் முழு ஒத்துழைப்புடன் பாடசாலையை முற்று முழுதாக சிரமதானம் செய்து சிறந்த முறையில் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் நியமனம் வழங்கப்பட்ட 60,000 பட்டதாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உலகநாடுகளும் படிப்படியாக தமது முடக்கநிலையை தளர்த்தி பாடசாலைகள் தொடக்கம் சகல நடவடிக்கைகளையும் சுகாதார முறைப்படி மீண்டும் ஆரம்பித்து வருகின்ற நிலையில் இலங்கையிலும் பாடசாலைகள் ஆரம்பமாகின்றன என்ற செய்தி சகலமட்டங்களிலும் வரவேற்பைப்பெற்றுள்ளது. ■

# உலகை அச்சுறுத்தும் "பற்றாக்குறை" நெருக்கடியால் தவிக்கும் நாடுகள்!

உலகம் முழுக்க, மக்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் வியாபாரிகள் கோப்பி முதல் நிலக்கரி வரை பல பொருட்களின் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர்.

இந்த நெருக்கடிக்கு கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட இடையூறுகள் மீதே பெரும்பாலும் குற்றம் சாட்டப் படுகிறது, இருப்பினும் யதார்த் தத்தில் பொருட்கள் பற்றாக்குறைக்கு பல காரணிகள் உள்ளன. இந்த பற்றாக் குறைகள் தொடர்பான விளைவுகள் பல வழிகளில் உணரப்படுகின்றன.

மின்சார பற்றாக்குறை, காகிதம், உணவு, புடவை, பொம்மைகள் தயாரிப்பு முதல் ஐபோன் சிப்கள் வரை அனைத் தையும் பாதிக்கிறது என ஒக்ஸ்போர்ட் இன்ஸ்டிட்டியூட் போர் எனர்ஜி ஸ்ட டீஸின் முனைவர் மைக்கெல் மெய்டன் கூறுகிறார்.

சீனாவில் 20க்கும் மேற்பட்ட மாகா ணங்கள் மின்வெட்டு பிரச்சனையை எதிர்கொண்டு வருகின்றன. சீனாவின் மின்சார உற்பத்தியில் பாதிக்கு மேல் நிலக்கரியிலிருந்து வருகிறது. உலகளவில் நிலக்கரியின் விலை உயர்ந்துள்ளது.

சீனாவில் கடுமையான விலை கட் டுப்பாடு இருப்பதால், இந்த விலை ஏற் றத்தை வாடிக்கையாளர்கள் மீது சுமத்த முடியாது, எனவே, ஆற்றல் நிறுவனங்கள் வெளியீட்டை குறைத்து வருகின்றன.

சுரங்கங்களில் புதிய பாதுகாப்பு சோதனைகள், கடுமையான சுற்றுச்சூழல் விதிமுறைகள், சமீபத்திய வெள்ளம் போன்றவைகளால் நிலக்கரி உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

சீன பொருட்களுக்கான தேவை அதிகரித்தாலும், தொழிற்சாலைகளின் எரிசக்தி பயன்பாட்டைக் குறைக்குமாறு அல்லது சில நாட்களுக்கு தொழிற்சாலை களை மூடுமாறும் கோரப்பட்டுள்ளன.

**கழிப்பறை காகிதம்**

கிறிஸ்துமஸ் பண்டிகை சமயத்தில், "மக்கள் சில பொருட்களைப் பெற முடியாத சூழல் நிலவலாம்" என வெள்ளை மாளிகையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

கழிப்பறை காகிதங்கள், குடிநீர் போத் தல்கள், புதிய ஆடைகள், செல்லப்பிரா ணிகளுக்கான உணவு... போன்றவை களின் கையிருப்புகள் பாதிக்கப்படும்.

**"உலகை அச்சுறுத்தும் பொருட்களின் பற்றாக்குறைக்கு கொரோனா பெருந் தொற்றால் ஏற்பட்ட இடையூறுகள் மீதே பெரும்பாலும் குற்றம் சாட்டப்படுகிறது, இருப்பினும் யதார்த்தத்தில் பொருட்கள் பற் றாக்குறைக்கு பல காரணிகள் உள் ளன. இந்த பற் றாக்குறைகள் தொடர்பான விளைவுகள் பல வழிகளில் உண ரப்படுகின்றன.**



**டேனியல் க்ரேமர்**

## அத்தியவசிய பொருட்களுக்கு உருவாகியுள்ள தட்டுப்பாட்டுக்கு கொரோனாதான் காரணமா?

அமெரிக்க துறைமுகங்களில் சரக்கு போக்குவரத்தில் இருக்கும் சிரமம் பிரச் னையின் ஒரு பகுதி. அமெரிக் காவுக்குள் நுழையும் 10 கப்பல்களில் 4 கப்பல்கள், இரண்டு துறைமுகங்கள் வழியாகத் தான் வருகின்றன. லொஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் லாங் பீச் தான் அந்த துறைமுகங்கள்.

செப்ரெம்பர் மாதத்தில் ஒருநாளில், லாஸ் ஏஞ்சல்ஸ் துறைமுகத்துக்கு வெளியே 73 கப்பல்கள் வரிசையில் நிற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இரண்டு துறைமுகங்களும் காத்திருப்பு அழுத்தங்களைக் குறைக்க வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் செயல்பாட்டு வருகின்றன.

மற்ற நாடுகளில் கொரோனா தொடர் பான பிரச்சனைகளால் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, அமெ ரிக்க விளையாட்டு பொருட்கள் மற்றும் ஆடை நிறுவனமான நைக்கின் பல பொருட்கள் வியட்நாமில் தயாரிக்கப் படுகின்றன. தற்போது அங்கு தொழிற் சாலைகள் மூடப்பட்டுள்ளன.

பொருட்கள் உற்பத்தி செய்யப்பட் டாலும் கூட, அவற்றை சில்லறை வியா பாரிகளிடம் கொண்டு சேர்ப்பது மிகவும் கடி னமாகிவிட்டது என ஹார்வர்ட் வியாபார பள்ளியின்பேராசிரியர்வில்லி ஷி கூறுகிறார்.

**கார்கள், கணினி சிப்கள்**

இந்தியாவின் மிகப்பெரிய கார் உற் பத்தியாளரான மாருதி சுசூகியின், உற் பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது, அதற்கு உலகளாவிய கணினி சிப்களின் பற்றாக் குறை காரணமாகக் கூறப்படுகிறது.

ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட பெருந் தொற்று தொடர்பான இடையூறு கார ணமாக பற்றாக்குறை ஏற்படுகிறது.

உலக அளவில் 5ஜி தொழில்நுட்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதால், பெருந் தொற்றுக்கு முந்தைய காலத்திலேயே தொலைபேசிகள் மற்றும் கணினி சிப்களுக்கு உலகளவில் தேவை அதிக ரித்து வந்தது. வீட்டிலிருந்தே வேலை செய்யும் சூழல் ஏற்பட்டதால் மடிக்க ணினிகள், வெப்கேம்களின் தேவை அதிகரிப்புக்கு வழிவகுத்தது.

இந்தியாவிற்குள் வரும் உதிரிபாகங் கள் மற்றும் பொருட்கள் பற்றாக் குறையை, நாட் டின் சொந்த எரிசக்தி சீர் குலைவு மோசமாக்கியது.



நாட்டின் நிலக்கரி கையிருப்பு மோசமாக குறைந்து வருகிறது. இந்தியாவின் கொரோனா இரண் டாவது அலைக்குப் பிறகு பொருளாதாரம் மீண்டெழத் தொடங்கி விட்டது. அது ஆற்றல் தேவை அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளது. மறுபுறம், உலகளவில் நிலக்கரியின் விலை அதிகரித்துள்ளது மற்றும் இந்தியாவின் நிலக்கரி இறக்குமதி குறைந்துள்ளது.

நிலக்கரியின் தாக்கம் பரவலாக இருப் பதாக கோல் இந்தியா லிமிடெட் நிறு வனத்தின் முன்னாள் தலைவர் சோஹ்ரா சட்டர்ஜி கூறினார்.

"நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டால் ஒட்டுமொத்த உற்பத்தித் துறையும் (சிமெண்ட், எஃகு, கட்டுமானம்) பாதிக்கப்படும்."

**கோப்பி மற்றும் தண்ணீர்**

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலத்தில் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட வறட்சி பிரேசிலின் கோப்பி அறுவடை சரிவுக்கு முக்கிய காரணம் எனலாம். அது போக உறைபனி மற்றும் இயற்கை யான அறுவடை சுழற்சி மாற்றம் இணைந்து, கோப்பி உற்பத்தியின் கணி சமான வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. அது போக, கப்பல் போக்குவரத்து செல வுகள் அதிகரிப்பு மற்றும் கொள்கலன் களின் பற்றாக்குறை கோப்பி உற்பத்தியா ளர்களின் சவால்கள் அதிகரித்துள்ளன.

கோப்பி விவசாயிகளின் செலவுகள் உலகெங்கிலும் உள்ள கஃபேக்களிட மிருந்து வசூலிக்கப்படும், காரணம் பிரேசில் தான் கோப்பியின் மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர். நாட்டின் பெரும்பாலான மின்சாரம் நீர்த் தேக்கங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் நீர் மின்சக்தியிலிருந்து வருவதால், தண்ணீர் பற்றாக்குறை நாட் டின் மின்சார விநியோகத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**நைஜீரியா: சமையல் எரிவாயு**

சமையலுக்குப் பயன்படுத்தப்படும் திரவ இயற்கை எரிவாயுவான எல்.என்.ஜி. பற்றாக்குறையை நைஜீ ரியா எதிர்கொண்டு வருகிறது. ஆபிரிக்காவிலேயே அந்நாட்டில் தான் மிகப்பெரிய இயற்கை எரி வாயு இருப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

எல்.என்.ஜியின் விலை ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் கிட்டத்தட்ட 60 சத வீதம் உயர்ந்துள்ளது, இது பல நைஜீரியர்கள் வாங்க முடியாத அளவுக்கு விலை அதிகரித்துவிட் டது. இதன் விளைவாக, வீடுகள் மற்றும் வியாபாரிகள் சமைக்க நிலக் கரி அல்லது விறகுக்கு மாறினர்.

உலகளவில் விநியோகப் பற்றாக் குறை ஏற்பட்டது இந்த விலை உயர் வுக்கு ஒரு முக்கிய காரணம் - நாடு இன்னும் இறக்குமதி செய்யப்பட்ட எல்என்ஜியையே நம்பியுள்ளது.

**தண்ணீர் மற்றும் மருந்துகள்**

லெபனானில் தண்ணீர், மருந் துகள்,எரிபொருள் பற்றாக்குறை உள்ளன. கடந்த 18 மாதங்களாக, லெபனான் பொருளாதார நெருக் கடியைச் எதிர்கொண்டு வருகிறது. அந்நெருக்கடி, அந்நாட்டின் 75 சதவீத மக்களை வறுமையில் தள்ளியது. மேலும் பொருளாதார நெருக்கடி அதன் நாணயத்தை முடக்கியது, அரசாங்கத்துக்கு லெபனானின் அரசியல் அமைப்புக்கும் எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களைத் தூண்டி யது.

கொரோனா பெருந்தொற்றுக்கு முன்பே நாட்டின் பொருளாதாரம் சிக்கல்களைச் சந்தித்தது. கொரோனா பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கியுள்ளது. எரிபொருள் பற்றாக்குறையால் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகிறது, பண வசதி படைத்த வணிகங்கள் மற்றும் குடும்பங்கள் விலை உயர்ந்த தனியார் மின்சார டீசல் ஜெனரேட்டர்களை வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

"எரிபொருள் நெருக்கடியால் லெபனானில் மில்லியன் கணக்கிலான மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு, நீர் விநியோகப் பிரச்சனை ஏற்படுவது குறித்து மிகவும் கவலைப்படுவதாக" கடந்த ஓகஸ்ட் மாதத்தில், லெபனா னுக்கான ஐ.நா மனிதநேய ஒருங்கிணைப் பாளர் நஜத் ரோச்சடி கூறினார்.

**- பி.பி.சி.**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 45 நிமிடம்

கல்வி tv CHANNEL

6. பெயரெச்சம் ஒன்று தருக?

..........................................................................................................

7. விசிறியும் சுழியும் உள்ள சொல்லை எழுதுக?

..........................................................................................................

8. இப்பாடலில் உள்ள எதிர்ச்சொல் சோடி ஒன்று எழுதுக?

..........................................................................................................

(11x1= 11 புள்ளிகள்)

02. எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக்குக.

1. ர், மா, த, ந் ..........................................................................

2. த, ர், ன், ட, உ, பி, ந், ற, வ ..........................................................................

(2 x 1= 2 புள்ளிகள்)

03. பின்வரும் சொற்களை "ம" வரிசைப்படி எழுதுக

மெத்தை, மோடன், மண், மாலை ..........................................................................

(1 x 1= 1 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களாக்குக

1. தருகின்றன/தகவல்களையும் / செய்தித்தாள்கள் /படங்களுடன் /செய்திகளையும்

..........................................................................................................

2. வேண்டாம் / இருக்க/ ஓதாமல் / ஒருநாளும்

..........................................................................................................

(2 x 1= 2 புள்ளிகள்)

05.வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

1.யானை பிளிறும் என்பது போல மயில் ..........................................(கூவும், அகவும், பேசும்)

2.மாவுக்கு கன்று போல நெல்லுக்கு .......................................... ( நாற்று, வடலி, குட்டி)

3.நாய்க்கு குட்டி போல கீரிக்கு .......................................... ( குஞ்சு,குட்டி,பிள்ளை)

(3 x 1= 3 புள்ளிகள்)

1.காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் ..........................................................................

2. ஆழமறியாமல் காலை விடாதே ..........................................................................

(2 x 1= 2 புள்ளிகள்)

07. வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவு செய்து எழுதுக

1. நாங்கள் தினமும் காலையில் பால் ..........................................................................
(குடிப்போம், குடித்தோம்)

2. சிகிரியா ஓவியங்களுள் அநேகமானவை பெண் உருவங்களாக ..........................................
(இருந்தது, இருந்தன)

3. கோழிகள் குப்பைகளைக் .......................................... (கிளறியது, கிளறின)

4. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கட்டடத்திறப்பு விழா ..........................................
(நடைபெறுகின்றது, நடைபெறும்)

(4 x 1= 4 புள்ளிகள்)

08. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1. Please go out ..........................................................................

2. I have a pen ..........................................................................

(2 x 1= 2 புள்ளிகள்)

09. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1. நான் வகுப்பறையைப் பெருக்குவேன் ..........................................................................

(1 x 1= 1 புள்ளிகள்)

# அரசிலிருந்து வெளியேறுங்கள்

## சு.கவுக்கு மீண்டும் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.21

**“அரசுக்குள் இருந்துகொண்டு சூழ்ச்சி செய்வதைவிட, வெளியேறி அரசியல் செய்யுங்கள்.”**

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க.

அத்துடன், விவசாயிகளின் போராட்டத்தின் பின்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் செயல்படுகின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுதந்திரக் கட்சியை அண்மைக்காலமாக கடுமையாக விமர்சித்துவரும் ரொஷான் ரணசிங்க, பல தடவைகள் வெளியே செல்லுமாறும் வலியுறுத்தியுள்ளார்.



அதேவேளை, சுதந்திரக் கட்சியை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சு.கவின் சிரேஷ்ட உப தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா குறிப்பிட்டுள்ளார். (இ)

# உத்தேச புதிய அரசமைப்பு விரைவில் ஜனாதிபதியிடம்

## நீதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 21

புதிய அரசமைப்புக்கான வரைவு நகல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் விரைவில் கையளிக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“புதிய அரசமைப்பை இயற்றும் பணி தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது. இதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவானது, புதிய அரசமைப்புக்கான வரைவு நகலை விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது.

அதன்பின்னர் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தக் கூடிய புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான வாய்ப்பு எமக்கு உருவாகும்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றும் உள்ளது. சகல தரப்பினரினதும் கருத்துகளை உள்வாங்கிய பின்னரே மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரச தலைமை முடிவெடுக்கும்” - என்றார். (இ)

# விபச்சார விடுதி சுற்றிவளைப்பு; 2 பெண்கள் உட்பட மூவர் கைது!

கம்பஹா, ஒக். 21

கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவை பிரதேசத்தில் விபச்சார விடுதி ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது விபச்சார விடுதியை நிர்வகித்து வந்த நபர் மற்றும் பெண்கள் இருவர் உள்ளடங்கலாக மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தங்கொட்டுவை, டயகம, மாதம்பை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 29, 31 மற்றும் 38 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மேலும் 71 பேர் கைது!

கொழும்பு, ஒக். 21

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று வரையான 24 மணித்தியாலங்களில் 71 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 81 ஆயிரத்து 311 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளி யேறும் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறி 345 வாகனங்களில் வந்த 618 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ)

# நான்கு நாட்களாக கொழும்பு மாநகரில் கொரோனா மரணம் பதிவாகவில்லை!

கொழும்பு, ஒக். 21

கொழும்பு மாநகரில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. கடந்த நான்கு நாட்களில் கொரோனாவால் எவரும் உயிரிழக்கவில்லை.

இந்தத் தகவலை கொழும்பு மாநகர தலைமை மருத்துவ அதிகாரி ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக கொழும்பில் ஐந்து நோயாளிகளே நாளாந்தம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த நான்கு நாட்களாக எவரும் கொரோனாவால் உயிரிழக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளாந்தம் நாங்கள் 220 பி.சி.ஆர். சோதனைகளையும், 300 துரித அன்ரிஜென் சோதனைகளையும் முன்னெடுக்கின்றோம். இவற்றில் இரண்டு வீதத்துக்கும் குறைவானவர்களே நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

புதிதாக அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாதவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, பொதுமக்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்வதால் கொரோனா வைரஸ் மீண்டும் தலைதூக்கலாம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

# தேர்தல் முறைமை மாற்றத்தின் பின்பே மாகாண சபை தேர்தல்

## அமைச்சரவை பேச்சாளர் டலஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 21

“சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவம் உட்பட விகிதாசாரத் தேர்தல் முறைமையிலுள்ள சாதகமான விடயங்களை பாதுகாத்துக்கொண்டே தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்படும். அதன்பின்னரே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடும்.”

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“தேர்தல் முறைமை தொடர்பில் பிரச்னை இருக்கின்றது. குறிப்பாக 2017 இல் கடந்த அரசால் முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமானது, பல முரண்பாடுகளுக்கு வழிவகுத்தது. எனவே, முதலில் அதனைச் சரி செய்ய வேண்டும்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என நான்கு தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

முழு இலங்கையும் ஒரு தொகுதியாக கருதப்பட்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுகின்றது. உலகளவில் இந்த முறைமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தலானது முழுமையாக விகிதாசார முறைமையின் கீழ் இடம்பெறுகின்றது. கடந்த அரசால் முன்வைக்கப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தலை 50 இற்கு 50 என்ற அடிப்படையில் விகிதாசார மற்றும் கலப்பு முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு இடம்பெற்றது. அதேபோல் உள்ளூராட்சி சபைத் தேர் தலை 60 இற்கு (தொகுதி) 40 (விகிதாசாரம்) என்ற வகையில் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நான்கு தேர்தல்களும் இவ்வாறு நான்கு விதத்தில் நடத்தப்படுகின்றமை நகைச்சுவைத்தனமாகும். எனவேதான் தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

ஜே. ஆர். ஜெயவர்தனவால் முன்வைக்கப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறைமையில் சில சாதகமான விடயங்களும் உள்ளன. அதனை நாம் மறந்துவிட முடியாது. குறிப்பாக சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட்டது. இது வரவேற்கக்கூடிய விடயம். எனவே, விகிதாசாரத் தேர்தல் முறைமையிலுள்ள சாதகமான விடயங்களைப் பாதுகாத்துக்கொண்டு தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்படும்.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியாது.

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்ட பின்னரே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடும். இவ்வருடத்துக்குள் அதனைச் செய்யமுடியாது.” - என்றார். (இ)

ஈழநாடு





# பேஸ்புக்குக்கு பெயர் மாற்றம்!

நியூயோர்க், ஒக். 21

பேஸ்புக் பெயரை மாற்ற அதன் நிறுவுநரான மார்க் ஸூக்கர்பேர்க் திட்டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

பேஸ்புக் நிறுவனத்தில் தற்போது வட்ஸ் அப், இன்ஸ்ட்ராகிராம் ஆகிய சமூகவலைத்தளங்களும் உள்ளன. அண்மையில் பேஸ்புக் நிறுவனம் திடீரென சில மணி நேரம் தடைப்பட்டது. இதனால் பல கோடி பேர் பாதிக்கப்பட்டனர். அத்துடன், பல் கோடி டொலர்கள் நட்டமும் ஏற்பட்டது.

இந்தநிலையில், பேஸ்புக் நிறுவனம் புதிய பெயரில் மீள் நிறுவப்படும். இதனை தாய் நிறுவனமாகக் கொண்டு இன்ஸ்ட்ராகிராம், வட்ஸ் அப், ஒகுலஸ் உள்ளிட்டவை கிளை நிறுவனங்களாக மாற்றப்படும் என்று தெரியவருகின்றது.

எனினும், இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள மாநாட்டில் உத்தியோகபூர்வமாக அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று தி வெர்ஜ் இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, மெடா வெர்ஸ் எனும் மெய்நிகர் உலகை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இயற்கையான ஒரு பொருளை பயனர்கள் தங்கள் கற்பனை கண்களில் காண்பிக்கும். இந்த தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் பேஸ்புக் நிறுவனம் தீவிரம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பன்றியின் சிறுநீரகம் மனிதனுக்கு! அமெரிக்க மருத்துவர்கள் சாதனை!!

நியூயோர்க், ஒக். 21

மருத்துவ வரலாற்றிலேயே முதன்முறையாக பன்றியின் சிறுநீரகம் மனிதனுக்கு பொருத்தப்பட்டுள்ளது. அதனை மனித உடல் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ஏற்றுள்ளது. இந்த முயற்சி மருத்துவ வரலாற்றில் மிகப்பெரிய முன்னேற்றமாகக் கருதப்படுகின்றது.

இந்த சோதனை முயற்சி வெற்றிபெற்ற நிலையில், மனித உறுப்பு பற்றாக்குறையைப் போக்கிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சோதனை அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள என். வை.யு லங்ஒன் உறுப்பு மாற்று சிகிச்சை மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியிடம் இருந்து எடுக்கப்பட்ட சிறுநீரகத்தை மூளைச்சாவடைந்த ஒருவருக்கு பொருத்தியதில், அந்த சிறுநீரகம் நன்றாக இயங்கியதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மனிதனின் இரத்தநாளங்களுடன் பன்றியின் உறுப்பைப் பொருத்துவதில் சிக்கல் ஏற்பட்டதையடுத்து வயிற்றுக்கு வெளியே தொடையின் மேல் பகுதியில் அந்த சிறுநீரகம் மூன்று நாள்கள் வைக்கப்பட்டு பரிசோதனை நடைபெற்றது.



மனிதருக்குப் பொருத்தப்படும் சிறுநீரகத்தில் எதிர்பார்க்கப்படும் சிறுநீர் அளவு, பன்றியின் சிறுநீரகத்திலும் காண முடிந்ததாகவும், அந்த நபருக்கிருந்த மோசமான சிறுநீரக செயல்பாட்டைவிட, புதிதாக பொருத்தப்பட்ட பன்றி சிறுநீரகத்தின் செயல்பாட்டில் முன்னேற்றம் இருந்ததாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 7 ஆயிரம் பேர் உறுப்பு மாற்றுக்காகக் காத்திருக்கிறார்கள். இதில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுநீரகங்களுக்காகக் காத்திருக்கின்றனர். இவர்கள் சிறுநீரகத்திற்காக சராசரியாக மூன்று முதல் ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# 4,000 தொன் கோதுமை மா ஆப்கானை சென்றடைந்தது

காபூல், ஒக். 21

ஆப்கானிஸ்தானுக்கு 4 ஆயிரம் தொன் கோதுமை மாவை கஜகஸ்தான் அனுப்பி வைத்துள்ளது.

தலிபான்களின் ஆட்சியின் கீழ் இருக்கும் ஆப்கானிஸ்தானில் இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

இதனால், உலக நாடுகள் உதவ வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது. இந்த நிலையில், கஜகஸ்தானிலிருந்து 4 ஆயிரம் தொன் கோதுமை மா அனுப்பப்பட்டுள்ளது.

கஜகஸ்தானின் இந்த உதவிக்கு ஆப்கானிஸ்தான் நன்றி தெரிவித்துள்ளது. (ஐ)

# உத்தராகண்டம் வெள்ளத்தால் 47 பேர் மரணம்!

புதுடில்லி, ஒக். 21

இந்தியாவின் உத்தராகண்டம் மாநிலத்தில் பெய்து வரும் கன மழையால் பலியானவர்களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது. அங்குள்ள குமாயோன் பகுதியில் பல வீடுகள் மழை காரணமாக பல வீனம் அடைந்து இடிந்து சேதமடைந்துள்ளன.

உத்தராகண்டத்தின் ருத்ர பிரயாக், நைனிடால், மற்றும் உதம்பூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களிடம் பேசிய முதலமைச்சர் தாமி, நெருக்கடியான கட்டத்தில் மக்கள் பொறுமையுடனும் கவனமாகவும் இருக்குமாறு கேட்டுக் கொண்டார். மழை, வெள்ளத்தால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு 4 இலட்சம் இந்திய ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது. (ஐ)



# இஸ்ரேல் படைகள்மீது பலஸ்தீனர் தாக்குதல்!

ஜெருசலேம், ஒக். 21

இஸ்ரேல் படையினருக்கும் பலஸ்தீன போராளிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் தொடக்கம் மீண்டும் மோதல் ஆரம்பமாகியுள்ளது.

டமஸ்கஸ் நுழைவு வாயில் பகுதியில் நேற்று முன்தினம் கூடிய பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய படைகள் மீதும் பஸ்கள் மீதும் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்தே இஸ்ரேல் படையினருக்கும், பலஸ்தீன போராளிகளுக்கும் இடையே மோதல் வெடித்தது.

மோதலின்போது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி பலஸ்தீன போராட்டக்காரர்களை இஸ்ரேல் படை விரட்டியது. இந்த மோதலில் 17 பேர் காயமடைந்தனர். 22 பேரை இஸ்ரேல் இராணுவம் கைது செய்துள்ளது. (ஐ)

# யேமன் உள்நாட்டு போரில் 10 ஆயிரம் சிறுவர்கள் பலி!

ஜெனிவா, ஒக். 21

மத்திய கிழக்கு நாடான யேமனில் 5 ஆண்டுகளாக தொடரும் உள்நாட்டு போரில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் கொல்லப்பட்டனர் யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

யேமனில் 2014ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் அரசாங்கத்துக்கு எதிராக போரை தொடங்கியதுடன், தலைநகர் சனாவை கைப்பற்றினர்.



இதைத் தொடர்ந்து தொடங்கிய போரில், இதுவரை ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். இதில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிறுவர்களாவர்.

இங்கு, ஐந்தில் நான்கு சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன.

கடந்த 2015 மார்ச் 15 முதல் - 2021 செப்ரெம்பர் வரை 3,455 சிறுவர்கள் கொல்லப்பட்டனர் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், உத்தியோகபற்றற்ற அறிவிப்பின்படி இந்த எண்ணிக்கை 10 ஆயிரத்தை கடக்கும் என்று கூறப்படுகின்றது.

உலகிலேயே சிறுவர்கள் வாழ கடினமான நாடு யேமன்தான். அங்கு நிலைமை மேலும் மோசமாகி வருகிறது. அங்கு உணவு கிடைக்காமல் மக்கள் பட்டினி கிடக்கவில்லை உணவுப் பொருட்கள் வாங்க பணமின்றி மக்கள் கஷ்டப்படுகின்றனர். (ஐ)

# பிள்ளைகள் தவறிழைத்தால் பெற்றோருக்கு தண்டனை!

## சீனாவில் புதிய சட்டத்துக்கு ஏற்பாடு

பீஜிங், ஒக். 21

பிள்ளைகளின் தவறான நடத்தை அல்லது குற்ற செயல்களுக்கு பெற்றோருக்கு தண்டனை வழங்கும் வகையில் சட்டம் கொண்டு வர சீன பாராளுமன்றம் பரிசீலித்து வருகிறது. சீனாவில் குடும்ப கல்வி ஊக்குவிப்புச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதில், பிள்ளைகளின் தவறான நடத்தைகளுக்கு பெற்றோரை பொறுப்பாக்குவதுடன் குழந்தை வளர்ப்பு பற்றிய வகுப்புகளுக்கும் அவர்கள் அனுப்பி வைக்கப்படுவர். பெற்றோர் மட்டுமல்லாமல் பிள்ளைகளின் பாதுகாவலருக்கும் இச்சட்டம் பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் பாராளுமன்ற நிலைக்குழு இந்த சட்ட முன் வடிவை ஆய்வுசெய்ய உள்ளது.பெற்றோர் பிள்ளைகளிடம் நேரத்தை செலவிட வேண்டும், விளையாட வேண்டும், உடற்பயிற்சி செய்தல் உள்ளிட்ட நற்செயல்களில் ஈடுபட வேண்டும் என்றும் இந்த சட்டம் பரிந்துரைக்கிறது. (ஐ)

# ஸ்கொட்லாந்து அணி வெற்றி; சுப்பர் - 12 வாய்ப்பு பிரகாசம்!



அல் அமீரத், ஒக். 21

பப்புவா நியூகினியை 17 ஓட்டங்களால் வீழ்த்தி, சுப்பர் 12 வாய்ப்பை பிரகாசப்படுத்தியது ஸ்கொட்லாந்து அணி.

அல் அமீரத்தில் நேற்று முன்தினம் நடந்த பி பிரிவில் ஸ்கொட்லாந்து - பப்புவா நியூகினி அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 165 ஓட்டங்கள் எடுத்தது. 166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பப்புவா நியூகினி 20 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் பி பிரிவில் 4 புள்ளிகளுடன் ஸ்கொட்லாந்து அணி சுப்பர் 12 பிரிவுக்குள் செல்வதற்கான வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது. அடுத்ததாக ஓமான் அணியுடன் மட்டும் ஒரு போட்டியில் மோதவுள்ளது. இதில், ஸ்கொட்லாந்து வெல்லும் பட்சத்தில் முதலிடம் பெற்று சுப்பர்-12 பிரிவில் ஏ பிரிவில் இடம்பெறும்.

ஸ்கொட்லாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்வுக்கு காரணமான பெரிங்டனுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. பெரிங்டன் 49 பந்துகளில் 70 ஓட்டங்கள்( 3 சிக்ஸர், 6 பௌண்ட்ரி) சேர்த்து ஆட்டமிழந்தார். மற்றொரு வீரர் மத்தியூ கிராஸ் 45 ஓட்டங்களில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். இவர்கள் இருவர் தான் ஸ்கொட்லாந்து அணியில் குறிப்பிடத்தகுந்தளவில் ஓட்டங்களை எடுத்தனர். மற்ற வீரர்கள் யாரும் ஜொலிக்கவில்லை.

பப்புவா நியூ கினியா அணியில் கபுவா மோரா 4 விக்கெட்களையும், சாட் சோப்பர் 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனும் இலக்குடன் பப்புவா நியூகினிய அணி களமிறங்கியது. தொடக்கத்திலிருந்தே சீரான இடைவெளியில் விக்கெட்களை பப்புவா அணி இழந்து வந்தது. அனுபவம் வாய்ந்த ஸ்கொட்லாந்து பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் துடுப்பாட்ட வீரர்கள் திணறினர்.

6 விக்கெட் இழப்புக்கு 67 ஓட்டங்கள் என்ற பரிதாப நிலையில் இருந்தது. 7ஆவது விக்கெட்டுக்கு நோர்மன் வனுவா, டோரிகா ஆகியோர் சேர்ந்து அணியை மீட்கும் முயற்சியில் இறங்கினர். இருவரும் 7ஆவது விக்கெட்டுக்கு 53 ஓட்டங்கள் சேர்த்துப் பிரிந்தனர்.

டோரிகா 18 ஓட்டங்களிலும், நம்பிக்கையளித்த வனுவா 47 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். கடைசிவரிசையில் களமிறங்கிய சாட் சோப்பர் அதிரடியாக 16 ஓட்டங்கள் சேர்த்து வெளியேறினார். 19.3 ஓவர்களில் 148 ஓட்டங்களில் பப்புவா அணியின் போராட்டம் முடிவடைந்தது.

ஸ்கொட்லாந்தின் ஜோன் டேர்வி 4 விக்கெட்களை வீழ்த்தினார். (ஐ)

இருபது - 20 உலகக்கிண்ணம்:

# ஓமான் அணியை போராடி வென்றது பங்களாதேஷ்!



அல் அமீரத், ஒக். 21

சகீப் அல்ஹசன், முஸ்தபிஹூர் ரஹ்மானின் பந்துவீச்சு, முஹமது நயீமின் அரைச்சதம் ஆகியவற்றால் ஓமான் அணியை 26 ஓட்டங்களால் வெற்றி கொண்டது பங்களாதேஷ்.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் முதல் சுற்றில் பி பிரிவு அணிகளான பங்களாதேஷ், ஓமான் அணிகள் அல் அமீரத்தில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியது பங்களாதேஷ்.

20 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 153 ஓட்டங்களை எடுத்தது. 154 ஓட்டங்கள் எடுத்தால், வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய ஓமான் 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 127 ஓட்டங்களையே எடுத்தது. இதனால், 26 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இந்த வெற்றி மூலம், பங்களாதேஷ் இருபது - 20 தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. முதல் போட்டியில் ஸ்கொட்லாந்து அணியிடம் தோல்வியை தழுவினாலும், ஓமானுக்கு எதிரான போட்டியில் போராடி வெற்றி பெற்றுள்ளது.

பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரரான சகீப் அல்ஹசன் 42 ஓட்டங்களை எடுத்ததுடன், 3 விக்கெட்களையும் வீழ்த்தி ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

பங்களாதேஷ் அணிக்கு தொடக்கம் கொடுத்த முஹமட் நயீம் 3 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசி 64 ஓட்டங்களை குவித்தார். நான்காவது வீரராக வந்த சகீப் அல்ஹசன் 42 ஓட்டங்களை 6 பௌண்ட்ரிகளுடன் எடுத்தார். நயீம் ஆட்டமிழந்தபோது, பங்களாதேஷ் 2 விக்கெட் இழப்புக்கு 101 ஓட்டங்கள் என வலுவான நிலையிலேயே இருந்தது.

ஆனால், அடுத்த 52 ஓட்டங்களுக்கு பங்களாதேஷ் 8 விக்கெட்களையும் இழந்தது. பின்னர் எடுக்கப்பட்ட 17 ஓட்டமே அந்த அணியின் மூன்றாவது பெரிய ஓட்டமாக அமைந்தது. அணித் தலைவர் மஹ்மதுல் லாஹ் ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் அந்த ஓட்டங்களை எடுத்தார்.

ஓமான் அணிக்காகப் பந்து வீசிய பியல் கான், பயாஸ் பட் ஆகியோர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினார். கலிமுல்லாஹ் 2 விக்கெட்களை வீழ்த்தினார்.


இதைத் தொடர்ந்து, 154 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது ஓமான் அணி.

தொடக்க வீரர் அகிப் இல்யாஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்த காஸ்யப் பிரஜாபதி 21 ஓட்டங்களை எடுத்தார். மற்றொரு தொடக்க வீரரான ஜதீந்தர் சிங் 40 ஓட்டங்களை குவித்தார். 13ஆவது ஓவரில் இவர் ஆட்டமிழக்கும்வரை போட்டியின் போக்கு ஓமான் வசமே இருந்தது.

சகீப் அல்ஹசன் வீசிய 17 ஆவது ஓவரில் 2 விக்கெட்களையும், முஸ்தபிஹூர் 18 ஆவது ஓவரில் 2 விக்கெட்களும் வீழ்த்தப்பட்டன. இதையடுத்து போட்டி பங்களாதேஷின் பக்கம் சாயத் தொடங்கியது.

இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்த ஓமான், 127 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷின் பந்து வீச்சில் முஸ்தபிஹூர் ரஹ்மான் 4, சகீப் அல்ஹசன் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



# பற்றின்சன் திடீர் ஓய்வு

சிட்னி, ஒக். 21

அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் பற்றின்சன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்துள்ளார்.

டிசெம்பரில் ஆஷஷ் டெஸ்ட் தொடர் நடக்கவுள்ள நிலையில் உடல்நிலையில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக ஓய்வு பெறுகிறேன் என்று பற்றின்சன் அறிவித்துள்ளார். அதேநேரம் உள்நாட்டுப் போட்டிகளிலும் விக்ரோறியா அணிக்காகவும்தொடர்ந்து விளையாடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

31 வயதாகும் பற்றின்ஸன் அவுஸ்திரேலிய அணிக்காக 21 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 81 விக்கெட்களையும், 15 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 16 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். இவர், கடந்த கடந்த 2011ஆம் ஆண்டு டேவிட் வோர்ணர், மிட்ஷெல் ஸ்ரோர்க் ஆகியோருடன் அவுஸ்திரேலிய அணியில் அறிமுகமானார்.

கடைசியாக 2020ஆம் ஆண்டு ஜனவரியில் சிட்னியில் நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பற்றின்ஸன் ஆஸிஅணியில் விளையாடினார். அதன்பின் அவருக்கு காலில் ஏற்பட்ட காயம், முழங்காலில் ஏற்பட்ட காயம் ஆகியவற்றால் தொடர்ந்து விளையாடவில்லை. ஒருநாள் போட்டிகளில் 2015ஆம் ஆண்டு முதலே அவர் விளையாடுவதை தவிர்த்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு



# நீதிக்கான போராட்டங்களை கொச்சைப்படுத்த வேண்டாம்

## அரசிடம் மைத்திரி வலியுறுத்து



கொழும்பு, ஒக். 21

**“ஆசிரியர்கள், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரின் நீதிக்கான போராட்டங்களை அரசிலுள்ள எவரும் கொச்சைப்படுத்தக்கூடாது.”**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் நாம் முன்வைத்துள்ளோம்

முன்னைய ஆட்சியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தத் தான் முயற்சிகளை எடுத்தும் ஏனையவர்கள் அதற்கு இடமளிக்கவில்லை.

நாட்டின் நிகழ்கால அரசியல் மற்றும் சமூக செயல்பாடுகள் குறித்து எம்மால் திருப்தியடைய முடியாதுள்ளது.

நாட்டு மக்கள் தமது அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீனவர்கள் தமக்கான நியாயம் கேட்டு போராடுகின்றனர். விவசாயிகள் உரம் தருமாறு கோரிக்கையை முன்வைத்துள்ளனர். மரக்கறி உற்பத்தியாளர்கள் தமது விளைச்சலுக்கு ஏற்ற விலை இல்லை எனக் கவலைப் படுகின்றனர்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தமக்கான கொடுப்பனவுகள் வேண்டும் எனக் கேட்டு நிற்கின்றனர். மக்கள் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாக அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அரசு இது குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டும். நாமும் ஆளும் கட்சிக்குள் இருக்கும் முக்கிய பங்காளிக் கட்சியாக அரசுக்கு நிலைமைகளை எடுத்துக்கூறி வருகின்றோம்” - என்றார். (இ)

# முன்னாள் இராணுவ சிப்பாய் இரு கைக்குண்டுகளுடன் கைது



திருருமலை, ஒக். 21

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன் தீவுப் பகுதியில் இரண்டு கைக் குண்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் இராணுவச் சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த இராணுவச் சிப்பாயைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ)

# பசறையில் மேலும் 23 பேருக்கு தொற்று

பசறை, ஒக். 21

பசறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட காட்டருப்ப பகுதியில் மேலும் 23 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

பசறை மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஜெயக்குமார் இதனைத் தெரிவித்தார்.

50 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையின்போது, 23 பேருக்குத் தொற்றுள்ளமை உறுப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொரோனாத் தொற்று உறுதியானவர்களைத் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்து செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உரிய சுகாதார விதிகளை முறையாக பின்பற்றுமாறு பசறை மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஜெயக்குமார் கோரியுள்ளார். (இ)

# எஸ்.ரி.எவ்பின் சுற்றிவளைப்பில் 13 பேர் வசமாக சிக்கினார்கள்!



கொழும்பு, ஒக். 21

நாடளாவிய ரீதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளில், பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக 8 மதுபான சுற்றிவளைப்புகளில் எண்மர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 203 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் 571 லீற்றர் கோடா, ஆறு செப்புத் தகடுகள், இரண்டு எரிவாயு அடுப்புகள், ஒரு எரிவாயு அடுப்பு என்பவற்றையும் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, கம்பஹா மாவட்டம் மினுவங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டுகொட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், இந்நாட்டுக்கு சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 240 புகைத்தல் பொருட்களுடன் கொட்டுகொடை பிரதேசத்தை சேர்ந்த 54 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருநாகல், பன்னல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாரளுவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். தாரளுவ பிரதேசத்தை சேர்ந்த 32 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி, உடவளவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனஹடுவ வாவிக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அனுமதிப் பத்திரமின்றி பல்வேறு வகையான மரப்பலகைளுடன் பயணித்த டிரக்டரை வழிமறித்து சோதனையிட்ட பொலிஸார் பலகைகளுடன் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். பல்லேபெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், கருவலகஸ்வெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முரியன்குளம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அனுமதிப்பத்திரமின்றி மரம் அறுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 21, 47 வயதுகளையுடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

# சண்டிலிப்பாயில் கைத்துப்பாக்கி!



யாழ்ப்பாணம், ஒக். 21

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதி அபிவிருத்திக்காக நிலத்தை தோண்டியபோது துருப்பிடித்த நிலையில் கைத்துப்பாக்கியொன்று மீட்கப்பட்டது.

சண்டிலிப்பாய் சந்திக்கு அண்மையாக நேற்று இந்த கைத்துப்பாக்கி மீட்கப்பட்டது. (அ)

# கர்ப்பவதி, இரு குழந்தைகள் உட்பட 10 பேர் குளவி கொட்டி வைத்தியசாலையில் சேர்ப்பு

புத்தளம், ஒக். 21

புத்தளம் மாவட்டம், தளுவ பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 10 பேர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்கானவர்களில் கர்ப்பவதி ஒருவரும், குழந்தைகள் இருவரும் உள்ளடங்குகின்றனர்.

தென்னை மரத்தில் கூடு கட்டியிருந்த குளவிகள் கலைந்து வந்து குறித்த பகுதியில் இருந்தவர்களைக் கொட்டியுள்ளது. (இ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1947 - 04 - 21 | 2021 - 10 - 19 |



## திருமதி அருந்தவம் சுப்பிரமணியம்

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவம் சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (19.10.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பிராஜா சுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய தபால திபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி ஐயாத்துரை - தங்கம்மாவின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திருமதி அஞ்ஜலா ஜெயகரன் மற்றும் அஞ்ஜிதன், திருமதி அனுசியா, திருமதி அஜந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2021) வியாழக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் சண்டிலிப்பாய் மேற்கு இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொ .பே. : 077 741 2348**

## கூட்டமைப்பை...

'டான்' தொலைக்காட்சியின் 'ஸ்பொட்லைட்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நேர்காணல் வழங்கியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். சம்பந்தன் ஏனைய பங்காளிக் கட்சிகளை அரவணைத்துச் செல்லும் நிலையில், சுமந்திரன் அவ்வாறு மற்றைய கட்சிகளை அரவணைத்துச் செல்வதில்லை என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து கேட்கப்பட்ட போதே சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

"சம்பந்தன் தலைவராக இருக்கும் காலத்தில் அவர் கூட்டமைப்பை கட்டுக்கோப்பாக வைத்திருந்தாரென சொல்கிறீர்கள். ஆனால், அப்படி இல்லையே! அவர் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்ற காலத்தில்தான் யார் கூட்டமைப்புக்கு உள்ளே இருக்கின்றார்கள்? யார் வெளியே இருக்கின்றார்கள்? என்பது தெரியாமல் இருந்த காலமும் இருந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, கூட்டமைப்புக்கு உள்ளே வந்தது எப்போது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், வெளியே போனது எப்போது என்பது யாருக்கும் தெரியாது. அவர்கள் உள்ளே இருக்கின்றார்களா? வெளியே இருக்கின்றார்களா? என்பதுகூட தெரியாதிருந்த ஒரு நிலையும் இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியை எடுத்துக் கொண்டால் 2015ஆம் ஆண்டுத் தேர்தலில் அவர்கள் எம்முடன் இணைந்து போட்டியிட்டனர். சுரேஷ் பிறேமச்சந்திரன் இதில் தோல்வியடைந்தார். சிவசக்தி ஆனந்தன் பாராளுமன்றத்துக்கு வந்தார். அவர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராகத்தான் முழுக்காலமும் இருந்தார். இடைநடுவில்தான் எமக்குத் தெரியும் அவர்கள் எம்முடன் - கூட்டமைப்புடன் இல்லை என்று. எந்தநாள் அவர்கள் வெளியே போனார்கள் என்று தெரியாத நிலை. ஆனால், அவர்கள் வெளியே போய்விட்டார்கள்.

அதாவது, யார் உள்ளே? யார் வெளியே? என்பது தெரியாமலும், எப்போதும் வரலாம் போகலாம் என்ற நிலை இருந்தது சம்பந்தனின் தலைமைத்துவக் காலத்தில்தான். அதனால், அவர் (சம்பந்தன்) எல்லாவற்றையும் ஒழுங்காக வைத்திருந்தார். இனிமேல்தான் அனைத்தும் சிதறப்போகின்றது என நினைப்பது தவறு" எனவும் சுமந்திரன் தெரிவித்தார்.

**விக்னேஸ்வரன் விவகாரம்**

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்புடைய விவகாரம் குறித்து கருத்து வெளியிட்ட சுமந்திரன் அது குறித்து தெரிவிக்கையில்,

"ஒற்றுமை என்று சொல்கின்றபோது சில அடிப்படை விடயங்களில் உண்மைத்துவம் இருக்க வேண்டும். பொதுத் தேர்தல் வந்த போது கூட்டமைப்பின் முதலமைச்சராக இருந்துகொண்டு, வீட்டைவிட்டு வெளியே வந்து வாக்குப் போடுங்கள் என விக்னேஸ்வரன் சொன்னார். அவர் என்ன சொன்னார் என்பது அனைவருக்கும் விளங்கியது. எமது ஒரு பிரசார மேடைக்கு கூட அவர் வரவில்லை. அவரை முதலமைச்சராக்கிய போது அனைத்து பிரசார மேடைகளிலும் முதலாவது வாக்கு அவருக்கு என்று சொல்லித்தான் அனைத்து வேட்பாளர்களும் வாக்கு கேட்டார்கள். சம்பந்தன் அனைத்து மேடைகளிலும் அதனைச் சொன்னார். ஆனால், பொதுத் தேர்தலில் விக்னேஸ்வரனின் சமிஞை வேறொன்றாக இருந்தது.

தேர்தல் முடிந்தவுடன் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில், விக்னேஸ்வரனை கட்சியை விட்டு நீக்க வேண்டும் என நான் சொன்னேன். தன்மானம் உள்ள ஒரு கட்சி அதனைச் செய்திருக்க வேண்டும். சம்பந்தன் இதற்கு சொன்ன பதில், "அவரது செயல்பாடு மிகவும் மோசமானது. எந்த அரசியல் கட்சியும் மன்னிக்க முடியாத குற்றத்தை அவர் செய்திருக்கின்றார். ஆனால், நாங்கள் ஒரு கஷ்டமான காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறம். அதை என்னிடம் விடுங்கள் நான் அவருடன் பேசுகின்றேன்" என்று சம்பந்தன் சொன்னார்.

அதற்கு நான் சொன்னேன், "மன்னிக்க முடியாத குற்றம் என்று நீங்களே சொல்கின்றீர்கள். அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டும்" என்று. ஆனால், சம்பந்தன் சொன்ன பின்னர், மற்றவர்களும் அதனை ஏற்றுக்கொண்டு என்னை அடக்கிவிட்டார்கள். நான் சொன்னதில் நியாயம் இருந்தது என்பதை இன்று தமிழ் அரசுக் கட்சி, கூட்டமைப்பில் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றார்கள்" எனவும் சுமந்திரன் தெரிவித்தார்.

## இளைஞர்களின்...

டினார்.

நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்க இருக்கும் இளைஞர் சமுதாயம் ஏமாற்றமடைந்து, அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியானால் இந்த நாடு என்னவாகும்எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பிற்பகல் அன்னாசி விவசாயிகளின் பிரச்னைகளை ஆராய தொம்பே கிரிந்திவெல விவசாயிகளை சந்தித்தார். இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எவருக்கும் தீங்கு விளைவிக்காமல் தமது பலத்தால் இந்த நாட்டுக்கு உணவு வழங்கிய விவசாயிகளை, அரசாங்கம் படுகுழிக்குள் தள்ளியுள்ளது.

விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந்தால் இழப்பீடு வழங்குவதாக அரசாங்கம் இன்று பெருமை பேசினாலும், குறைந்த பட்சம் பல மாதங்களாக தெருவில் நிற்கும் ஆசிரியர்கள் அதிபர்களின் சம்பள முரண்பாடுகள் மற்றும் பிரச்னைகளைத் தீர்க்க நிதியை ஒதுக்கவில்லை.

இப்படியான அரசாங்கம், விவசாயிகளின் பிரச்னைகளுக்கு பதில்களை வழங்கி அவர்களது பயிர்ச் செய்கைகளுக்கு இழப்பீடுகளை எவ்வாறு வழங்க முடியும்? -என்றார்.

## வடக்கில் 639...

களின் ஒன்றிணைந்த ஒத்துழைப்பின் கீழ் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றன என்று மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

"நீண்ட இடைவெளிக்குப் பின் பாடசாலைகள் திறக்கப்பட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றனமை மகிழ்ச்சியளிக்கிறது. சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவரும் நன்றிகூறி பாராட்டுகின்றேன்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார ஊழியர்களது அர்ப்பணிப்பான சேவை பாராட்டுக்குரியது" என்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, "வடக்கு மாகாணத்தில் நாளை (இன்று) ஆரம்பிக்கப்படும் 639 பாடசாலைகளும் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை இன்று முன்னெடுக்க தயார் நிலையில் உள்ளன. சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்குரிய கைகளைத் சுத்தப்படுத்தும் திரவம் உள்ளிட்டவையும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன" என்று வட மாகாண கல்விப் பணப்பாளர் செல்லத்துரை உதயகுமார் தெரிவித்தார். (ஐ)

## மாகாண தேர்தலை...

ஹூலுக்கும் இடையில் விசேட சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்திப் பகுதி அதிகாரிகள், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ராஜன் ஹூல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விசேட சந்திப்பின்போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூல் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் விரிவாக எடுத்துரைத்தார். (அ-03)

# வடமாகாணத்தில் மேலும் 30 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஒக். 21

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 21 பேர் உட்பட வடக்கில் மேலும் 30 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் நேற்று 206 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு 30 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக,

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 21 பேர்

யாழ். போதனா வைத்தியசாலையில் - 03 பேர் (உயிரிழந்த முதியவர் உட்பட)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் - ஒருவர், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் - ஒருவர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலையில் - ஒருவர், முல்லைத்தீவு விமானப்படை முகாமில் - ஒருவர், மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் - ஒருவர், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் - ஒருவர்

## முழு நாடும்...

அனைவரும் எதிர்த்தார்கள். சிக்கலை சந்திப்போம் என்றார்கள். ஆனால், இன்று கல்வித்துறை உட்பட முழு நாடும் சிக்கல் நிலையில் இருக்கிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் பிறந்த தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

டி.எஸ்.சேனாநாயக்க எண்ணுவதை செய்து முடிக்கும் தலைவர். சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னரே நாட்டில் விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக வாவிகளை புனர் நிர்மாணம் செய்யவும் புதிய வாவிகளை அமைக்கவும் நடவடிக்கை எடுத்தார். 70 வருடங்கள் சென்ற பின்னர் எனக்கும் அதற்கான வாய்ப்பு கிடைத்தது. சேனாநாயக்க அதற்கான அடித்தளத்தை அன்றே பெற்றுக்கொடுத்ததன் காரணமாகவே என்னாலும் அதனை நிறைவேற்ற முடிந்தது.

சுதந்திரம் அடைவதற்கு முன்னர் தேசிய அடையாளத்தின் அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும் என்று அன்று அவர் கூறினார். அதனையே இன்றும் எமக்கு செய்ய நேர்ந்துள்ளது.

அவர் நாளைய தினத்தைப் பற்றிச் சிந்திக்கும், எதிர்காலத்தைச் சரியாக செப்பனிடும் தலைவர் என்ற அடிப்படையில் அதனையொரு கருத்தாக எடுத்துச் சென்றார். ஆகவே, எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து அதற்காகச் செயற்படும் எமக்கு புதிய கட்சியொன்று தேவைப்படுகிறது. ஆகவே, அதற்கு ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே இருக்கிறது என்பதை மறுத்துவிட முடியாது.

ஜோன் கொத்தலாவல, பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்காக அவர் தனது வீட் டையே வழங்கினார். இவ்வாறு எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தித்து உருவாக்கிய விடங்களையே தற்போது நாம் அனுபவித்து வருகின்றோம்.

நாங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்திருந்தாலும் ஏனையவர்கள் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. பாடசாலை மாணவர்கள் சார்பில் தீர்மானத்தை எடுத்த போது அனைவரும் அதனைஎதிர்த்தார்கள். நாங்கள் சிக்கலை சந்திப்போம் என்றார்கள். இன்று கல்வித்துறையே சிக்கல் நிலையில் இருக்கிறது. அன்றே பாடசாலை மாணவர்களுக்கு 'ரப்' வழங்கியிருந்தால் இன்று இந்த நிலை தோற்றம் பெற்றிருக்காது.

தேர்தலுக்குச் சென்றோம். கொள்கை பிரகடனத்தையும் வெளியிட்டோம். முன்னரே கொரோனா தொடர்பில் அறிவித்திருந்தோம். அவதானமாக இருக்குமாறு அறிவித்தோம். ஒவ்வொரு பிரச்னைகளிலிருந்தும் வெளிவருவதற்கான மாற்றுத் திட்டங்களை முன்வைத்தோம். ஆனால், அதனை மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. முழுமையாகத் தோல்வியைச் சந்தித்தோம்.

இன்று எதிர்பார்ப்புகள் இல்லாத - எதிர்காலம் இல்லாத நாடு தோற்றம்பெற்றுள்ளது. பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள் இருந்தாலும் எதிர்காலம் குறித்துச் சிந்தித்துச் செயற்படுவது ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே. நாங்கள் வழிகாட்டுகிறோம். ஆனால், எதிர்காலம் உங்களுடையதாக இருக்க வேண்டும். கொள்கை ரீதியான அரசியலை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் 5-6 வருடங்கள் போதாது. 20 வருடங்களாவது ஒரே பாதையில் செல்லவேண்டும். கட்சி மாறினாலும் கொள்கைகள் மாறிவிடக் கூடாது. அதனை பாதுகாத்துக்கொள்வதற்கு சட்டரீதியாக வலுப்படுத்தவேண்டும்.

எதிர்காலத்தை நோக்கிச் செல்ல வேண்டுமானால் முதலில் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இரண்டாவதாகப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும். 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான நவீன பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். நான்காவது பொருளாதார புரட்சிக்குச் செல்வதற்கான அனுபவமுள்ள சமூகத்தை உருவாக்கக் கல்வி பாதுகாப்பையும் பெற்றுக்கொடுக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு அவசியம்.

புதிய இளைஞர்களை எமது கட்சி தலைமைத்துவத்துக்கு நியமித்துக் கொண்டு வருகிறோம். ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவில் புதிதான மூன்று இளைஞர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இன்னும் பலர் புதிதாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்-என்றார்.

## மீண்டுமொரு...

ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

'கோவிட்' சமூகமயமாக்கல் தொடர்பில் சுகாதார அமைச்சு இன்னும் தெளிவான அறிக்கையை இன்னும் வெளியிடவில்லை என்றாலும் நாடு சமூகமயமாக்கப்பட்ட தொற்றுநோயை எதிர்கொள்கின்றது என்று தெரிவித்த அவர்,

விஞ்ஞான ரீதியிலான கண்காணிப்பு இல்லாமல் அதைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டார்.

சில நிபுணர்கள் வேண்டுமென்றே கணிப்புகளுக்கான வழிகளைத் தடுத்துள்ளனர் என்றும் மேலும் அலைகள் ஏற்படும் என்று கணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மற்றோர் அலை ஏற்பட்டால் அத்தகைய நிபுணர்களே அதற்குப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## மாகாணம்...

ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் தளர்த்தப்பட்டது.

எனினும், தொற்று அச்சுறுத்தல் தொடர்வதால், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை ஒக்ரோபர் 21ஆம் திகதி (இன்று) வரையில் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய நிலைமையை கருத்தில்கொண்டு அதனை இம்மாத இறுதி வரையில் நீடிப்பதற்குக் கொரோனாத் தடுப்புச் செயலணி நேற்று தீர்மானித்துள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# நாட்டுக்கு அரிசி வழங்கும் விவசாயிகள் நடு வீதியில்

## ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 21

**விவசாயிகள் எதிர்நோக்கும் உரப் பற்றாக்குறையை முன்னிறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியது.**

குருநாகல் தேர்தல் தொகுதியின் வெல்லவை பிரதேசத்தில் விவசாயிகளும் எதிர்க்கட்சியினரும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.



"நாட்டுக்கு அரிசி வழங்கும் விவசாயிகள் வீதியில்" எனும் கருப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமேயின் உருவப் பொம்மையும் எரிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான அசோக அபயசிங்க மற்றும் ஜே.சி.அலவதுவல ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ)



## வெளிவிவகார அமைச்சருடன் பிரான்ஸ் தூதர் நேரில் சந்திப்பு

கொழும்பு, ஒக். 21

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்டு, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை மரியாதை நிமிர்த்தமாக சந்தித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பலதரப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் நட்புறவை இரு தரப்பினரும் வரவேற்றதுடன், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர் என்று வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இருதரப்பு வர்த்தக விரிவாக்கம், முதலீடு, சுற்றுலாத்துறை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறை உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் கொழும்பு மற்றும் பாரிஸூக்கு இடையேயான நேரடி விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் திட்டத்தை இருவரும் வரவேற்றுள்ளனர். (இ)

## கடலில் மூழ்கிய சிறுவனை காப்பாற்ற சென்றவரும் பலி

புத்தளம் மாவட்டம், மாரவில முதுகட்டுவ கடலில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றச் சென்று காணாமல்போன நபர், நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொபேஹின்ன பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பிங்கிரிய பகுதியிலிருந்து மாரவில பிரதேசத்துக்கு சுற்றுலா நிமிர்த்தம் வருகை தந்த சிலர், மாரவில முதுகட்டுவ பிரதேசத்திலுள்ள கடலுக்கு நீராடச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது சிறுவன் ஒருவன் கடலில் மூழ்கி திடீரென காணாமல் போனார். இதையடுத்து சிறுவனின் பெற்றோர்கள் கூக்குரலிட்டுள்ளனர்.

அங்கு நின்றவர்கள் கடலுக்குள் சென்று குறித்த சிறுவனைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும், சில மணிநேரத்தின் பின்னர் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவன் பத்திரமாக மீட்கப்பட்டார்.

சிறுவனை மீட்பதற்காகச் சென்றவர்களில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி காணாமல்போயிருந்தார்.

இவரைக் கடந்த இரு நாட்களாகத் தேடி வந்த நிலையில், சடலமாக நேற்று அவர் கரையொதுங்கியுள்ளார். (இ)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



**திருமதி**
**சின்னம்மா பரராஜசிங்கம்**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25.09.1932 | 10.09.2021 |

நயினாதீவு, பருத்துறை அல்வாய் வடக்கு, (Swiss) வசிப்பிடமாக கொண்ட திருமதி சின்னம்மா பரராசசிங்கம் அவர்கள் கடந்த 10.09.2021 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை – ராமாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், வல்வெட்டித்துறையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் – ராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சபாபதிப்பிள்ளை (திருகோணமலை), காலஞ்சென்றவர்களான வேலாயுதம், குமரையா, பொன்னம்மா, பராசக்தி, விசாலாட்சி, பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈஸ்வரமூர்த்தி, சிறிபக்தலிங்கம், சிறிராம், சிவசிறி (Winterthur- சிவா அல்லது சிறி, அல்வாய் வடக்கு நண்பர்களுக்கு பிள்ளையார்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேந்தினி, காந்திமலர், ஜெயானந்ததேவி, யூலியானா, காலஞ்சென்ற திசைவீரசிங்கம் (புங்குடுதீவு 10 ம் வட்டாரம் – வீராமலை), மனோன்மணி (சுவிஸ் பேர்ன்), சிவம் (சுவிஸ் ஓல்டன்), நாகேஸ்வரி (திருநெல்வேலி), காலஞ்சென்ற மங்களகௌரி (திருநெல்வேலி), ரவீந்திரன் (நயினாதீவு), உதயமலர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சீதாசரஷ்வதி (கொழும்பு), இளங்கோவன் (சுவிஸ் பேர்ன்), சிற்றம்பலம் (அச்சுவேலி), விவேகானந்தன் (யாழ்ப்பாணம்), காசிநாதன் (மணிவண்ணன் – யாழ்ப்பாணம்) ஆகியோரின் சின்னம்மாவும், காலஞ்சென்ற கருணாநிதி, கந்தவேல் (நல்லூர்), ஈஸ்வரன் (கனடா), திருமகள் (கனடா), ராஜலஷ்மி (மணி – கனடா), ஆகியோரின் பாசமிகு குஞ்சியாத்தாவும், சஹானா, சனோர், சிகானியா, சிசாயினி, ராகவி, ரவீனா, ரதீஸ், ஸ்கார்லெட் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 24.10.2021 (ஞாயிற்றுக்கிழமை) Quartier Verein Gutschick- Mattenbach Scheidegg Str.19 8400 Winterthur என்ற இடத்தில் அந்தியேட்டி கிரியைகள் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் அன்னாரது துயரச் செய்தி அறிந்து தொலைபேசி மூலமும் நேரிலும் ஆறுதல் கூறியவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்கள், இரங்கல் உரை நிகழ்த்தியவர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
**சிறி - 0041789554724**
**ராம் - 0041764031971**
**சிவசிறி - 0041762135336**

**தகவல்**
**குடும்பத்தினர்.**










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்



*6.31 மணி* : தினம் ஒரு திருக்குறள்
*6.35 மணி* : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்- சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள் தலைவர் இந்து குருமார் அமைப்பு



*7.05 மணி* : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா. நவராஜ்
*7.15 மணி* : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்



*7.20 மணி* : சித்த மருத்துவம் வழங்குபவர் : டாக்டர் விவியன் சத்தியசீலன்
*7.30 மணி* : இன்றைய பத்திரிகைகளில்
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை-நேரலை
*10.30 மணி* : தொடர் நாடகம்
*11.00 மணி* : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
*12.00 மணி* : சிரிக்கலாம் வாங்க-நேரலை
*1.00 மணி* : நலம்தானா-மறுஒளிபரப்பு
*1.30 மணி* : சுப்பர் சீன்ஸ்-ரியூப்லைட்,அருவி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
*4.30 மணி* : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



*5.30 மணி* : குறுந்திரை நேரம்
*6.00 மணி* : வெள்ளித்திரை

**இரவு**
*7.00 மணி* : சமையல் சமையல்
*7.30 மணி* : வெள்ளிடை நுட்பம்- தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*9.00 மணி* : மாதம் ஒரு இசைக்குழு
*10.00 மணி* : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

---

**காலை**
*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : திரைப்படம்

**பகல்**
*1.00 மணி* : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : திரைப்படம்
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**
*8.00 மணி* : திரைப்படம்
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை
*7.00 மணி* : ஒய்வெடு நிலவே

**இரவு**
*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**
*5.15 மணி* : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
*6.00 மணி* : க.பொ.த உயர்தரம் - வணிகம்
*6.45 மணி* : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
*7.30 மணி* : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
*8.15 மணி* : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
*12.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
*1.00 மணி* : தரம் 5 மாதிரி வினாத்தாள்
*2.00 மணி* : தரம் 5 சுற்றாடல்
*3.00 மணி* : தரம் 5 கணிதம்
*4.00 மணி* : தரம் 6 - 9 ஆங்கிலம்
*5.00 மணி* : பொது சிங்களம்
*6.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
*7.00 மணி* : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

---

**காலை**
*5.00 மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*07.00 மணி* : இன்றைய சிந்தனை
*07.05 மணி* : இன்றைய நாள்
*07.30 மணி* : மங்கள இசை
*08.00 மணி* : அருளுரை
*08.30 மணி* : திருவாசகம்
*09.00 மணி* : திருவிழா-01
*10.00 மணி* : பாடல்கள்
*10.30 மணி* : பஜனை
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**
*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : திருவிழா-02
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
*7.00 மணி* :செய்திகள்
*7.30 மணி* : அருளுரை

---

**காலை**
*7.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
*8.00 மணி* : ஜெபமாலை
*9.00 மணி* : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
*09.30 மணி* : மன்றாடு
*10.00 மணி*: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
*10.30மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*11.30 மணி* : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
*12.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*01.00 மணி* : திருப்பலி (மட்டக்களப்பு)
*03.00 மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*04.00 மணி*: திருப்பலி (மட்டக்களப்பு)
*05.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*06.00 மணி* : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

---

**காலை**
*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய சிறுவர் பாடல்
*8.00 மணி* : சற் வித் குட்டீஸ்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : வேர் கொள்
*11.00 மணி* : மனிதம்
*11.30 மணி* : சுக வாழ்வு

**பகல்**
*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : அன்னிஸா
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*4..00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
*5.00 மணி* : சற் வித் குட்டீஸ்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : பாடல்
*8.30 மணி* : மனிதம் வித் றிஸ்வான்
*9.00 மணி* : Bayan
*10.00 மணி* : சீரிஸ்
*10.30 மணி* : கலந்துரையாடல்